நூலகம்



நியூயார்க் பொது நூலகம்

புத்தகப் பணி ஏடு

ஜனவரி 1970. மலர் 4. இதழ் 5.



தரமான. உறுதியுள்ள. உழைக்கக் கூடிய
மாட்டுத் தொழுவங்கள்
கட்ட

SANKAR CEMENT

சங்கர் சிமெண்ட்

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், சென்னை-2 தொழிற்சாலைகள்: சங்கா நகர்• சங்கரி.

C... ICT 2223 TM

நூலகம்

ஆசிரியர் :
குயிலன்

மலர் 4 இதழ் 5

ஜனவரி 1970

ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்பது

கார்ட்டூன்

நூலகமா? மியூசியமா?
தலையங்கம்

டாகுமென்டேஷன்
டாக்டர். எஸ். ஆர். ரங்கநாதன்

அமெரிக்காவில் பொது நூலகங்கள்
பா. பெருமாள்.

ஜெகசிற்பியன் சந்திப்பு
க. நாராயணன்

தகழி சிவசங்கரப் பிள்ளை
மணவை முஸ்தபா

இந்திய நூலகத் தந்தை
இரா. முத்துக்குமாரசாமி

நூலகம்-கிடங்கு
எஸ். கந்தசாமி

இன்னும் பல

அலுவலகம்:
14, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர்,
சென்னை-17

தொலைபேசி எண் :
441970

NOOLAGAM
Library & Book Trade Monthly

Published by:
BIBLIOPOLE
14, Thanikachalam Chetty Road,
Madras-17
Annual Subscription Rs. 9.



வாசகர்: ஏன் சார்! தமிழில் இப்போது இலக்கிய சிருஷ்டி நிண்ணு போச்சா?

நூலகர்: இல்லைசார்! எங்க நூலக ஆணைக் குழுவுக்கு தலைவர் சிருஷ்டிதான் ரொம்ப நாளா நிண்ணு போயிருக்கு. அதனாலே நாங்க புத்தகம் ஒண்ணும் இந்த வருஷம் வாங்க முடியலே!

நூலகமா? மியூசியமா?

தமிழ்நாடு பல துறைகளிலும் மிகவும் முன்னேறிய மாநிலம் என்று பெருமை பேசுகிறோம். அது உண்மையும் கூட.

1948 ல் தமிழகத்தில் நூலகச் சட்டம் அமுலுக்கு வந்தது. அதன் பயனாய் ஏராளமான பொது நூலகங்கள் திறக்கப்பட்டன.

நூலகம் என்றும் ஓங்கி வளருவதே! நூல்கள் இன்றி நூலகம் இயங்க முடியாது. புதிய புதிய நூல்கள் நாளும் சேர்க்கப்பட வேண்டும்.

மாவட்ட மைய நூலகங்களில் உள்ள நூல்கள் போதுமான தாகவோ, தரமுள்ளவையாகவோ இல்லை. சென்னை மாவட்ட மைய நூலகம் இதற்குச் சற்று விதி விலக்கு.

பொது நூலகங்கள் இந்த ஆண்டில் புதிய நூல்களை வாங்க வில்லை. அதிர்ச்சிதரும் உண்மைச் செய்தி இது. "பணமில்லை! சட்டம் இடம் தரவில்லை!" இப்படிப் பல காரணங்கள் கூறப் படுகிறது.

நூலக ஆணைக் குழுக்களில் தலைவர் தேர்தல் முடிந்த பாடில்லை. அதனால் நூல்கள் வாங்குவது நின்று போய் விட்டது. வளர்ச்சி தடைபட்டு, வனப் பிழந்து விட்டன நூலகங்கள்.

சென்னையில் தமிழ்நாடு வாசகர் பேரவை இரண்டு மாதங் களுக்கு முன்னர் மாநாடு கூட்டி, 67-69 ஆண்டுகளில் தமிழில் வெளி யான ஐந்து சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்தது. இவை வாசகர் களால் மிகவும் விரும்பப்பட்ட நூல்கள். இந்த நூல்கள் இன்று எத்தனை பொது நூலகங்களில் உள்ளன? சந்தரனில் மனிதன் இரு முறை இறங்கி நடந்து விட்டான். சரித்திர வரலாற்றில் நடை பெறாத நிகழ்ச்சி இது. வானவெளி ஆராய்ச்சி, அவற்றின் வெற்றி கள் பற்றிய நூல்கள் ஒன்றிரண்டாவது இடம் பெற்றுள்ள பொது நூலகங்கள் இங்கே எத்தனை உண்டு?

மக்களின் வரிப் பணத்தில் பொது நூலகங்கள் இயங்குகின்றன. இவை வளரும் நூலகங்களா அல்லது புத்தக மியூசியமா? இன்றைய நூலகங்களின் நிலை இதுதான். வரி கொடுக்கும் மக்கள்தான் தீர்ப்பும் வழங்க வேண்டும். மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.

நாடு நலம் பெற, எழுத்தாளர் வாழ்வு வளம் பெற, தமிழ் அறிவு ஒளி பெற, தமிழர்தம் சிந்தனை சீர் பெற, படியுங்கள்

தமிழ் உறவு நூல்கள் ஐம்பத்தைந்தும்

எழுத்துலகில் ஒரு சாதனை; தமிழ் உணர்வில் புது ஆக்கம்; தமிழ் நாட்டின் கூட்டுறவில் முதல் முயற்சி

தமிழ் உறவு நூல்கள்

மழலை மாரு மதலையரும், பள்ளியிற் பயிலும் மாணவரும், கல்லூரி கற்கும் இளையோரும், கடமை குன்ரு ஆடவரும், மனை விளக்காம் மங்கையரும், எழுத்தைப் போற்றும் முதியோரும், ஆராய்ச்சி வல்ல புலவோரும் பயிலும் பல துறைகளிலும் வெளி வந்துள்ளன

தமிழ் உறவு நூல்கள் ஐம்பத்தைந்து

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு 'தமிழ் உறவு' நூலின் லாபமும் அதன் ஆசிரியரைச் சேர்கிறது என்பதை நினைவு கூறுங்கள்.

புத்தகப் பட்டியலுக்கு எழுதுக :

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிட். X - 417

8, சின்னரெட்டித் தெரு, எழும்பூர், சென்னை-8

டாகுமென்டேஷன்

டாக்டர் **எஸ். ஆர். ரங்கநாதன்**
தமிழில்: **பார்த்தசாரதி பெருமாள்**

டாகுமென்டேஷனின் தோற்றம்

நூலகப் பணியின் புதிய துறை டாகுமென்டேஷன். இரண்டாவது உலகப் போருக்குப்பின், டாகுமென்டேஷன் பணியின் அவசியம் உணரப்பட்டது. இத் துறையில் நேற்று நடந்ததையும், இன்று நடப்பதையும் அறிந்து கொள்வது டாகுமென்டேஷன் பற்றி பூரணமாகப் புரிந்து கொள்ள உதவும்.

அச்சுக் கலைசகாப்தத்திற்குப்பிற்பட்ட நிலையை அறிந்து கொள்வதால் அதன் முந்திய வரலாறு புலனாகும்.

நூலக வாசகர்களின் இயல்புகள் பற்றியும் அறிந்து கொள்வது மிக அவசியம்.

இன்று புத்தகங்கள், பருவ ஏடுகள் போன்றவை ஏராளமான அளவில்வெளியாகின்றன. அவை வெளியாகும் வேகம், அவற்றின் தரம் பற்றி புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

மக்கள் தொகை மிகவேகமாகப் பெருகி விட்டது. சமுதாயம் சக்தி வாய்ந்ததாக உருவெடுத்து விட்டது. நூலகப்பணித் தேவையும் பல மடங்காகப் பல்கிப் பெருகி விட்டது. இது இன்றைய நிலை.

வளரும் வாசகர்கள்

அரை நூற்றாண்டுக்கு முன்பு வரை, உலகின் பல நாடுகளில் எழுத்தறிவு பெற்றோர் தொகை மிகக் குறைவாகவே இருந்தது. அப்போது நூலகத்தைப் பயன் படுத்திய கல்விமான்கள், அறிஞர்கள் மிகச் சொற்பமே. அதனால்

தான் அன்று பெரும்பாலான பல்கலைக் கழக, கல்லூரி நூலகங்களை நிர்வகிக்கும் பொறுப்புகளை ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்த அறிஞர் வசம் ஒப்படைத்து மேற்பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்குப் பலகுமாஸ்தாக்கள் உதவி வந்தனர். இத்தகைய சூழ்நிலையினால் நூலகத் தொழில் உதயமாகவில்லை.

19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிலநாடுகளில் ஆரம்பக்கல்வி கட்டாயமாக்கப் பட்டது. கற்ற சிறிதளவு கல்வியறிவை மறந்து விடாமல்இருக்கவும், தொடர்ந்து அபிவிருத்தி செய்து கொள்ளவும், தொடர் கல்விபெற துணை செய்யவும் பொது நூலகப்பணித்திட்டம் உருவாயிற்று.

பெரும்பான்மையான வாசகர்கள், ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடித்தவர்களாகத்தான் இருந்தார்கள். அதனால் தான் பெரும்பாலானவர்க்ள் நாவல்களையும் பிரயாண நூல்களையுமே பெரிதும் விரும்பி, பொழுது போக்கிற்காகப்படிக்கத் துவங்கினர். பொது நூலகங்களில் பட்டதாரி நூலகர்கள் நியமிக்கப் படாமலிருந்தமைக்குக் காரணம் இதுவே. நூலகப் பணிசெய்ய அமர்த்தப் பட்டோர் அதை ஒரு கைத்தொழிலாகக் கருதியே செயல் பட்டுவிட்டனர்.

மெல்வில் டூயி, ஜேம்ஸ் டப்பிரௌன், டபிள்யு சி. பெர்விக் சேயர்ஸ் முதலியோர் நூலகத் துறையில் திறமையாகப் பணி புரிந்து, இத்துறையின் உதாரண புருஷர்களாகத் திகழ்ந்தார்கள். நூலகப் பணியின் தரத்தை உயர்த்தி, அதன் அவசியத்தை மக்கள் உணரும்படிசெய்தார்கள்.

இப்படிப்பட்ட மாறுதலினாலேயே, கல்வி நிறுவனங்களில் பகுதி நேர மேலாளராக அறிஞர் ஒருவரை நியமிக்கும் வழக்கத்தைக் கைவிட்டு, நூலகக்கல்வியும் பயிற்சியும் பெற்றவர்களை முழு நேர நூலகர்களாக நியமிக்கத் தொடங்கினர். அறிஞர்கள் பலர் ஆவலுடன் நூலகராயினர். அதனால் நூலகத் தொழில் வளர்ச்சி பெற்றது. இன்றைய சமுதாய நூலகப் பணித் தேவைகளைச் சமாளிக்க, இப்புதிய முழு நேர நூலகர் நியமனங்கள் வழி வகுத்து, உதவின.

இன்றைய நூல்கள்

இந்த நூற்றாண்டுவரை, வெளியான நூல்கள் எண்ணிக்கையில் குறைவாகவேஇருந்தன. நூலகப் பணி வளர்ச்சியும் மிகக் குறைவாகவே இருந்தது. நூலகர்களின் உதவியின்றியே, அறிஞர்கள் தங்களுக்குத் தேவையான நூல்களை, நூலகங்களிலிருந்து தேர்வு செய்து எடுத்துச் சென்றனர்.

இந்த நூற்றாண்டில் இந்நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஒவ்வொரு ஆண்டும் புதிய புத்தகங்கள் எல்லாத் துறைகளிலும் ஏராளமாக வெளியாகின்றன. நூலகங்களிலும் மிக அதிக எண்ணிக்கையில் நூல்கள் சேர்க்கப்படுகின்றன. அதனால் நாளும் நூலக நூற்களின் தொகை கூடுகிறது.

கல்விமானாகிய வாசகர் கூட தானே மிகச்சுலபமாக நூற்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு நூலகங்களில் நூல்கள் குவிந்துவிட்டன. பொது நூலகங்களைப் பயன்படுத்தும் வாசகர்களுக்கே இந்த நிலை இப்போது வந்து விட்டது.

நூல்கள் பொருள்வாரியாகப் பிரிக்கப்பட்டு, பகுக்கப்பட்டுள்ளன. நூல் தட்டுகளில் அவ்வாறே அடுக்கியும் வைக்கப்பட்டுள்ளன. நூலகப்பட்டியல்கள், நவீன விஞ்ஞானமுறைப்படி தயாரிக்கப் படுகின்றன. இவைகளின் உபயோகம் இன்று மிக அதிகமாகி விட்டது. இதை அனைவரும் பாராட்டி வரவேற்கிறார்கள்.

வாசகர்கள் ஏராளமான நூல்களை வீட்டிற்கு படிக்க எடுத்துச் செல்கின்றனர். அதன் கணக்கு நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. நூலகங்களில் நூல் தேர்வுகள் விஞ்ஞான அடிப்படையில் நடைபெறுகின்றன. பகுப்பு முறையும், பட்டியல் முறையும், நூற்றொகையும் மிக அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. அதனால் நூலகத்தொழில் உதயமாயிற்று. நூலக இயல் படிப்பு நூலகத் தொழிலுக்கு வரப் பிரசாதமாக அமைந்து விட்டது.

இத்தகைய சமுதாய மாற்றங்களால், நூலகத் தொழில்–நூலக இயலாக மாறிவிட்டது. பணியின் தரமும் மிகக்கூடி விட்டது. மக்களும் ஏகோபித்துப்பாராட்ட ஆரம்பித்து விட்டனர்.

ஐந்து விதிகள்

1. நூல்கள் படிப்பதற்கே. 2. கற்போருக்கேற்ற நூல்கள். 3. நூல்களுக்கேற்ற கற்போர். 4. நேரம் பேணு 5. நூலகம்என்றும் ஓங்கி வளருவதே.

இந்த ஐந்து அடிப்படைகளில் நூலகங்கள் அமைந்துபணியாற்ற வேண்டும். இவையாவும் நூலகப் பணியின் அடிப்படை விதிகள், வரப் பிரசாதங்கள்.

உங்கள் சந்தாவைச் செலுத்தி விட்டீர்களா?

ஆண்டுச்சந்தா ரூபாய் ஒன்பது

நூலகம்

14, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17

இவை 40 ஆண்டுகளுக்குமுன்பு இந்தியாவில் உருவாக்கப் பட்டவை.

பின்னர் இது மிகச் சிறந்த "நூலக இயலின் ஐந்து விதிகள்" என்ற பெயரில் வெளிவந்து, உலகினரின் கவனத்தையும் கவர்ந்து, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பயன்படுத்தப் படுகிறது.

'நூலக இயலின் ஐந்து விதிகள்' என்ற நூல் மிக எளிமையாகவும், நடைமுறை தத்துவங்கள் நிறைந்தும், ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கியும் உள்ளது. இன்றைய நூலகப் பணித் தேவையை சமாளிக்க இக்கருத்துக்கள் வழிவகுத்துள்ளன. 1957 ல் திரு. பெர்விக் சேயர்ஸ் இந்நூல் பற்றி சிறப்பித்துக் கூறிய கருத்துக்கள் தாம் இவை. நூலகத்தொழிலின் வரப்பிரசாதமாக கருத வேண்டிய நூல் இது. நூலகத் தொழிலின் கருத்துக்களை, மதிப்பை வெகு வேகமாக மக்களிடையே பரப்ப இந்நூல்

பெரிதும் உதவியுள்ளது. உலகமே வியந்து பாராட்டுகிறது.

டாகுமென்டேஷன் இல்லாததால் ஏற்படும் நஷ்டம்

கடந்த 25 ஆண்டுகளில் தொழில்கள் நவீன மயமாகவும், விசேஷ கவனத்துடனும் நடத்தப் படுகின்றன. புதிய புதிய கருத்துக்கள், கண்டு பிடிப்புகள் நாளும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. முக்கியமான, ஆனால் சிறிய செய்திகள், கருத்துக்கள் நூல்களில் வருவதில்லை; தாமதம் ஏற்படுகிறது. பருவ ஏடுகளில் உடனுக்குடன் கட்டுரைகளாக அவை வெளியாகின்றன.

ஆராய்ச்சியின் முடிவுகள் வெகுவேகமாக வெளியாகின்றன. இத்தகைய வேகத்தை தொழிற்சாலைகள் சற்றும் எதிர்பார்க்க வில்லை. அவர்களின் எல்லை கடந்து விட்டது, பெருகி விட்டது.

உலகில் பருவ ஏடுகள் மிகப் பெருமளவில் பல்வேறு துறைகளில் வெளியாகின்றன. இவற்றின் தொகை நாளும் பெருகி வருகிறது. சமீப கால கணக்குப் படி, உலகில் லக்ஷம் பருவ ஏடுகளுக்கு மேல் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் இந்த லக்ஷம் பருவ ஏடுகளையும் முழுமையாக, செம்மையாகப் படித்து, பின் பயன் படுத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியமன்று. ஒரே ஆராய்ச்சி, பல்வேறு இடங்களில், எதிர்பாராத வகையில், செய்தி தெரியாத காரணத்தால் நடை பெறுவதும் உண்டு. இதை யாரும் முன் கூட்டியே எதிர்பார்க்க முடியாது. இத்தகைய இரட்டிப்பு வேலையை உணர சில ஆண்டுகள் பிடித்தன. இது தவிர்க்கப்பட வழி வகைகளைக் காண முற்பட்டனர். டாகுமென்டேஷன் பணி இல்லாததால் ஏற்பட்ட நஷ்டம் பின் வருமாறு:

எண் (1)	நஷ்டம் (2)	ஆராய்ச்சிப் பிரிவு (3)	நாடு (4)
1.	ரூ. 216,000,000	பொதுவாக விஞ்ஞானம்	இங்கிலாந்து
2.	ரூ. 15,600,000	எலக்டிரானிக்ஸ்	அமெரிக்கா
3.	ரூ. 18,700,000	எலக்டிரானிக்ஸ் மொழிபெயர்ப்பு சாதனங்கள்	அமெரிக்கா

பெங்களூர் DRTC பேராசிரியர் திரு நீலமேகம் அவர்கள் சமீபத்தில் தயாரித்த கணக்குத்தான் மேலே கொடுக்கப் பட்டுள்ளது. தொழிற்சாலை போன்றவற்றில் ஏற்படும் நஷ்டம், அவர்கள் அறியாமையினாலேயே, அவர்களுக்குத் தெரியாமலேயே ஏற்பட்டு விடுகிறது.

நஷ்டம் வராமலிருக்க வழி முறைகள்

இத்தகைய பிரம்மாண்டமான நஷ்டம் ஏற்படுவதை உணர்ந்த தொழிற்சாலைகள், நூலகத் தொழிலின் சேவையை, அதன் புதிய உத்திகளைப் பயன்படுத்தத் துவங்கினர். நஷ்டத்தைக்

குறைத்துக் கொள்ள நாட்டம் கொண்டவர்கள் அதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள்.

நூலகத் தொழில், தொழிற்சாலைகளின் தேவைகளை உணர்ந்து மனமுவந்து உதவ முன் வந்தது. தொழிற்சாலைகளின் ஆராய்ச்சிப் பணிக்கு உதவும் பொருட்டே பகுப்புமுறை, பட்டியல் முறை, ரெபரென்ஸ் சர்வீஸ் முதலிய துறைகளில் தீவிர உடனடி ஆராய்ச்சிகள் மூலம் புதிய உத்திகள் நவீன முறையில் கண்டு பிடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. தொழில் நிபுணர்களும், பிறமொழியாளர்களும், மொழி பெயர்ப்பு மற்ற உதவிகளை மனமுவந்து செய்தனர்.

சில தொழிற்சாலைகள் டாகுமென்ட லிஸ்டுகளை உடனடியாக நியமித்து, ஆதாயமடைந்தன. DRTC பேராசிரியர் திரு நீலமேகம் அவர்கள் சமீபத்தில் மதிப்பீடு செய்து, எங்கெங்கே, எவ்வளவு சேமிப்பு என்றவிபரங்களை வெளியிட்டார். அது இது :

எண் (1)	சேமிப்பு (2)	ஆராய்ச்சிப் பிரிவு (3)	நாடு (4)
1.	ரூ. 1,650,000	எலக்டிரானிக் வெல்டிங் சாதனங்கள்	விது–வேனியா
2.	ரூ. 8,000	கைத்தொழில்கள்	ஸ்வீடன்
3.	ரூ. 100,000	ஆடைகள்	டென்மார்க்
4.	ரூ. 360,000	இயந்திரக்கருவிகள்	இந்தியா
5.	ஆராய்ச்சியாளர்களின் 500 மணி உழைப்பு சேமிக்கப்பட்டது.	ஆராய்ச்சி அபிவிருத்தி ஆய்வுக் கூடங்கள்	அமெரிக்கா

இழப்பைத் தடுக்க வழி: டாகுமென்டேஷன் பொருள் உற்பத்தியில் 'அடாமிசேஷன்'

தொழிற்சாலைகளின் நவீனத் தேவைகளை சமாளிக்க நூலகத் தொழில் தனது பணிகளை மேலும் செம்மைப்படுத்தி, விரிவுபடுத்த எப்போதும் போல், இப்போதும் ஆவலாக உள்ளது. தேவையான மாற்றங்களை ஏற்படுத்த விரும்புகிறது. செயல்பட்டுள்ளது. வெற்றியும் பெற்றுள்ளது.

தொழிற்சாலைகள் இன்று நவீனமயமாகியுள்ளன. அதன் தேவைகள் பல்கிப் பெருகியுள்ளன. அதன் உற்பத்தியில் பல புதிய உத்திகளை, நடை முறைகளை கையாண்டு, ஆக்கத்தை விரைவு படுத்தியுள்ளது. இதே வழியில், நூலகத் தொழிலிலும் பல தேவையான இறுதி முடிவுகளைக் கண்டுள்ளது. இதையும் 'பொருள்கள் உற்பத்தியில் அடாமிசேஷன்' என விவரிக்கலாம்.

குடும்பத்திலேயே காணும்

மத்திய தொழிற் சங்க செய்தித் தாள்கள் 10. ஆசிரியர்களின் செய்தித் தாள்கள் 16, கலாசாரம், இலக்கியம், கலை, உடற் பயிற்சிக் கலை, விளையாட்டு ஆகியவற்றுக்கான செய்தித் தாள்கள் 30, தொழில் நுட்பம், தொழில், கட்டுமானம், போக்கு வரத்து, விவசாயம் ஆகியவற்றுக்கான செய்தித் தாள்கள் 35 ஆகியவை சோவியத் யூனியனில் பிரசுரமாகின்றன.

—சோவியத் செய்தி

உதாரணத்தை உணவு உற்பத்தியை பற்றிச் சிந்திப்போம்.

எழுபது ஆண்டுகளுக்கு முன், நான் சிறுவனாக இருந்த காலத்தில், எங்கள் கிராமத்தில் நூறு குடும்பங்களே இருந்தன.

அன்று நடந்தது

ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்த நிலமிருக்கும். தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்களை தாங்களே உற்பத்தி செய்தார்கள். உரம், நெல், தேங்காய், புளி, மிளகாய், தானியங்கள், பருப்பு வகைகள், வெல்லம், காய்கறிகள் ஆகிய குடும்பத் தேவைகளை தாங்களே உற்பத்தி செய்து கொண்டார்கள்.

நெல்லைக் குத்தி அரிசியாக்குவார்கள். தானியங்களைமாவாக்குவார்கள். காய்கறி பயிரிடுவார்கள். உணவு சமைத்து உண்டு மகிழ்வார்கள். பசு பால் தரும். எருமை ஏர் உழும். வெண்ணை, நெய் உருவாகும். எல்லாவற்றையும் குடும்பமே தயாரிக்கும். கோழி வளர்ப்பார்கள். ஆடு பராமரிப்பார்கள். இப்படி எத்தனையோ.

இன்று நடப்பது

சிலர் உரம் தயாரிப்பதில் மட்டும் அக்கரை காட்டுகின்றனர்.

சிலர் பூச்சி நாசினிகளைப் பயன்படுத்தி, பயிர் பாதுகாப்புப் பற்றியே யோசித்து, செயல்படுகிறார்கள். சிலர் உழுது பயிரிடுதலிலும், அறுவடைசெய்வதிலும் தனி ஆர்வம் காட்டுகின்றனர். செம்மையாகச் செய்யப் பழகுகின்றனர்.

சிலர் புதிய வகை விதைத் தானிய உற்பத்தியில் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார்கள். கலப்பினங்கள் உருவாகின்றன.

சிலர் தானியங்களை மாவாக்குகிறார்கள். மிஷின் வைத்துள்ளார்கள். நெல்லை அரிசியாக்க மிஷின் பயன்படுகிறது.

சிலர் பால் பண்ணை நடத்தி, பாலை பல நாட்கள் கெடாமலிருக்கப் பக்குவம் செய்யப் பழகுகிறார்கள். இயந்திரம் உதவுகிறது.

இப்படி ஒவ்வொருவரும் ஒரு சிறிய குறுகிய வேலையை செய்கின்றனர். ஆனால் அதில் திறமை காட்டுகின்றனர். ஆராய்ச்சி செய்து, முன்னேற்றம் காண்கின்றனர். தங்கள் வேலைகளை சுருக்கிக் கொண்டு விட்டனர்.

மேலே சொன்ன குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வெவ்வேறு இடங்களிலிருந்து பெற்று, தங்கள் குடும்பவேலையை சிறிய அளவிலேயே, ஆனால் அதை மிகச் சிறப்பாகச் செய்து வாழ்கின்றனர்.

பொருள்கள் தயாரிப்பில் காணப்படும் நடைமுறைப் போக்கை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. தொழிற்சாலையின் மையப் பகுதி முழுப் பொருளின் உருவத்தையும், உற்பத்தி முறையினையும் வடிவமைத்து, அதன் பாகங்கள் எவ்வாறு உருவாக்க வேண்டுமென திட்டம் தயாரித்தளிக்கிறது.

2. ஒவ்வொரு பாகத்தையும் சிறு தொழில் நிறுவனங்கள் தயாரிக்க அனுமதிக்கப்படுகிறது. குடிசைத்தொழில்கள் வளருகின்றன.

3. சிறு தொழில் நிறுவனங்கள் செய்த பாகங்களைப் பெற்று பெரிய தொழிற்சாலைகள் இணைத்தும், பிணைத்தும் முழுப்பொருளை உருவாக்குகின்றன.

4. தரமும், தரக்கட்டுப்பாடும், விலை நிர்ணயமும், தொழிற்சாலைகளால் கண்காணிக்கப்படுகிறது.

5. சிறு சிறு மாறுதல்களுடன் இப்படி உருவான சிறு பாகங்களைக் கொண்டு முழுப் பொருள் உருவாகி விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

உதாரணமாக:

கைக்கெடியாரம் செய்ய 120 பாகங்கள் சாதாரணமாகத் தேவைப் படுகிறதாம். 120 பாகங்களையும் தனித்தனியாக 120 சிறு தொழிற்கூடங்களில் 120 தனி நிறுவனத்தினர் செய்கின்றனர். இப்படி 120 இடங்களில் உருவான பாகங்கள் ஓர் இடத்தில் இணைக்கப்பட்டு. கைக்கெடிகாரங்களாக உருமாறுகின்றன: உற்பத்தியாகி, சந்தைக்கு அனுப்பப் படுகின்றன.

ஸ்விட்ஸர்லாந்தில் இருந்த போது இதை கவனிக்கும் வாய்ப்பு கிட்டியது.

சோவியத் யூனியனது கம்சோமால்ஸ்தாபனங்கள்செய்தித்தாள்களும், சஞ்சிகைகளுமாக 200 மொத்தப் பிரதி விநியோகம் 4 கோடி 50 இலட்சம் பிரதிகள் பிரசுரமாகின்றன.

25 குழந்தைகளின் செய்தித்தாள்களும் வெளியாகின்றன. மத்திய குழந்தைகளின் செய்தித்தாள் ''பயனீர்ஸ்கயாபிராவ்தா'' 1969 இல் 94 இலட்சத்து 24 ஆயிரத்து 200 பிரதிகள் பிரசுரமாகின.

— சோவியத் செய்தி

சில ஆயிரம் பாகங்களைக் கொண்டு ஆகாய விமானம் கட்டப்படுகிறது. சில நூறு பாகங்கள் மோட்டார் கார் செய்யத் தேவை. ஆகவே, சிறுசிறு பாகங்களை உருவாக்க துணைத் தொழிலகம் உள்ளன. இதைத்தான் ''பொருள் உற்பத்தியில் அடாமிசேஷன்'' எனலாம்.

தொழில் ஆராய்ச்சியில்: கருத்துக்களின் "அடாமிசேஷன்"

'சிறு துளிகள் பெருவெள்ளமாகிறது.' பொருள்உற்பத்தியில் 'அடாமிசேஷன்' ஏற்பட்டது போல், தொழிற்சாலை ஆராய்ச்சிக் கருத்துக்களில் 'அடாமிசேஷன்' புகுந்துள்ளது. பல்வேறு கருத்துக்கள் எங்கெங்கோ, எந்தெந்த கட்டுரைகளிலோ, பருவ ஏடுகளிலோ உள்ளன. இவற்றைத் திரட்டிச் செம்மைப் படுத்தி ஆராய்வது தொழிற்சாலை ஆராய்ச்சி யகங்களில் இன்று நடைபெறும் மிகச் சிறப்பான தொண்டாகும்.

(அடுத்த இதழில் முடியும்)

அமெரிக்காவில் பொது நூலகங்கள்

பா. பெருமாள், B. A., B. Lib Sc.,

சமூக சக்திகள் மதக் கல்வி பரவியது

17-ம் நூற்றுண்டில் 'மே பிளவரில்' கடற் பிரயாணம் செய்து 'யாத்திரை தந்தைகள்' அமெரிக்காவை அடைந்தனர். சென்றவர்களில் பியூரிட்டன்கள் அங்குள்ளவர்களுக்கு கல்விச் செல்வத்தை வாரி வழங்கினுர்கள். அப்போது கல்வி போதனை மதக் கடமையாகக் கருதப்பட்டது. படிப்பும் பாண்டித்யமும் சமூக அந்தஸ்தில் மிக உயர்வாகக் கருதப்பட்டது. அதனுல் அன்றே அமெரிக்கா நூலக நாடாக மாறத் தயாராகிவிட்டது.

தன்கையே தனக்குதவி தத்துவம்

அமெரிக்கர்கள் தங்கள் சுய வளர்ச்சிக்குத் தாங்களே படிப்பதை ஒருவழி எனக் கண்டனர். படிப்போர் தொகை பெருகியது. விரிவான பயனை அடைந்தனர். ஆகவே பொது மக்களின் இடைவிடாத தூண்டுதலினுல் சிறப்பான பொது நூலகங்கள் தோன்றின. பொது நூலகப்பணி உதயமாயிற்று.

மக்களாட்சி வளர்ந்தது

அமெரிக்காவில் குடியாட்சி நன்கு ஓங்கி வளர்ந்ததன் பயனுக, அதிக எண்ணிக்கையில் பொது நூலகங்கள் பரவலாகத் தோன்றி வளர்ந்தன.

மக்களால், மக்களுக்கு, மக்களாலேயே ஆளப்பட்ட ஆட்சியில் மக்கள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. இச்செயல் நாட்டின் வாழ்வில் சிறப்பான இடத்தைப் பெற்றது.

தொழிற் புரட்சி வந்தது

ஐரோப்பாவில் தோன்றிய தொழிற் புரட்சி, 19-20-ம் நூற்றுண்டுகளில் அமெரிக்கா விற்குப் பரவியது.

தொழில் வளர்ச்சிக்கு உயிர் நாடி போன்றவை செய்திகளும் தகவல்களும் ஆகும். அத்தகைய செய்திகளைத் திரட்டித் தரும் நூலகங்கள் மிகமிக முக்கியத் துவம் பெற்றன.

வாழ்க்கைத்தரம் உயர்ந்தது

அமெரிக்கா தொழில் மய மானது. இயந்திரங்களின் உப யோகம் பெருகியது. ஓய்வு நேரம் மிகுதியாகக் கிடைக்க ஆரம்பித்தது. வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது.

வாழ்க்கைத் தரத்தின் உயர் வால், ஓய்வின் பயனுல், அறிவுப் பசிஅதிகரித்தது. மிகுதியாயிற்று; இத்தகைய அறிவுத் தாகத்தைத் தீர்க்க நூலகங்கள் பெருமளவில் தோன்றின. நூலகப்பணி சிறப் பாக நடந்தது. மக்கள் அறிவுச் செல்வம் பெற்று அக மகிழ்ந் தனர்.

ஆண்டுரு கார்னீகி, ராக் பெல்லர் போன்ற பணக்காரர் கள், தருமகாரியமாக, கல்வி, ஆராய்ச்சி, நூலக அமைப்பு வளர்ச்சிக்குப்பெரிதும் உதவினர். இதனுல் நூலகப்பணியின் தரம் உயர்ந்தது.

முன்னேற்றத் தூதுவர்கள் அமெரிக்க நூலகச் சங்கம்

இது மிக சக்தி வாய்ந்தது. அனைவருக்கும் இச்சங்கம் இலவச நூலகப்பணி கிடைத்திட தீவிர மாகப் பாடுபட்டது. பொது மக்கள் தொடர்பு, பொதுநூலகப் பணித் தரக் கட்டுப்பாடு, நூல கச் சட்டம், படிக்கச் சுதந்திரம் ஆகியவற்றை இச்சங்கம் மூலம் பொது மக்கள் பெற்றனர்.

ஆண்டுரு கார்னீகி, அமெரிக் காவில் பொது நூலகப் பணி இல வசமாகக் கிடைத்திட பேருதவி புரிந்தார்.

நூலகர் பயிற்சி

நூலகப் பணி செய்யப் பயிற்சி யும் தக்க நூலகக் கல்வியறிவும், அவசியம் என முதலில் உணர்ந் தவர் மெல்வில் டூயி ஆவார்.

1887 ல் முதல் நூலகப் பள்ளி உருவாயிற்று.

1889 ல் அல்பேனியாவில் நூலக பட்டப்படிப்பைத் துவக் கினர்.

1920 வரை 14 நூலகப்பள்ளி கள் அமெரிக்காவில் இருந்தன.

1919ல் சி. சி. வில்லியம்ஸன் நூலகக் கல்வி பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தார். அவர் பல சிபாரிசுகளைச் செய்தார்.

1926ல் அவரே, கொலம்பியா பல்கலைக் கழக நூலக இயல் பள்ளிக்கு இயக்குனராகி, தன் சிபாரிசுகளுக்கு உருக்கொடுத்து, அவற்றை நடை முறையில் கொண்டு வந்து, வெற்றி பெற் ரூர். மற்றவர்களும் அவருக்கு ஆதரவு நல்கினர்.

நூலகக் கல்வியின் தரம் பாதுகாக்கப் படுகிறது

1949ல் 21 ஆங்கீகரிக்கப்பட்ட நூலகப் பள்ளிகள் இருந்தன. அவற்றில் 5 எம். லிப். எஸ்ஸி

பட்டப் படிப்புக்குப் பயிற்சி அளித்தன. சில பல்கலைக் கழகங்கள் நூலகத் துறையில் டாக்டர் பட்டமும் வழங்குகின்றன.

1964 கணக்குப்படி 290 நூலகப் பள்ளிகள் உண்டு. 32 நூலகப் பட்டப் படிப்புப் பள்ளிகள். அமெரிக்க நூலக கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டவை இவை.

இவ்வாறு நூலகப் பயிற்சி தரமாக நடைபெறுவதால், சிறப்பான தரத்துடன் நூலகப்பணி, பொது நூலகங்களிலும் கிடைக்கின்றன.

நூலக நிதி

அமெரிக்க குடியரசுத் தலைவர் திரு. ஜான்சன் 1966ல்—1956ம் ஆண்டு நிறைவேறிய நூலகச் சட்டத்திற்கு ஏற்பட்ட திருத்தத்தை நிறைவேற்றி வைத்தார்.

1966—1975 க்கு மிடையே உள்ள 10 ஆண்டுகளில் 575 மிலியன்டாலர்கள் செலவுசெய்து பொது நூலகப் பணியின் தரத்தை உயர்த்தப் போவதாகக் கூறினர்.

அமெரிக்கப் பொது நூலகங்களுக்கு கிடைத்த நிதி விபரங்களாவன

மூலம்	1956 டாலர்கள்	1964 டாலர்கள்	1965 டாலர்கள்	1966 டாலர்கள்
பெடரல்	—	7,500,000	54.900,000	70,000,000
ஸ்டேட்	6,700,000	15,800,000	39,300,000	43,600,000
லோகல்	31,700,000	68,500,000	352,600,000	374,600,000
மொத்தம்	38,400,000	91,800,000	446,800,000	488,200,000

பலன்கள்

1956 நூலகச் சட்டம், 1957 ஜனவரியில் அமுலுக்கு வந்தது. 36 மாநிலங்கள் இதில் பங்கு பெற்றன.

1961 மார்ச்சில் 50 மாநிலங்களும் 3 தனிப் பகுதிகளும் இச் சட்டத்தின் ஆட்சியின் கீழ் வந்தன.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நூலகச் சட்டம் செயல்படும் முறை பற்றி விமர்சன அறிக்கை தயாரிக்கப்படும். இதனுல் தேவையான, அவசியமான மாறுதல்களைச் செய்ய ஏதுவாகிறது. (தமிழகத்தில் 1948ல் சட்டமான சென்னை பொது நூலகச் சட்டத்திற்கு ஒரு முறைகூட இப்படிப் பட்ட அறிக்கை வெளியாகவில்லை 20 ஆண்டுகள் ஒடிவிட்டன. 4 அறிக்கைகள்வந்திருக்கவேண்டும்)

அமெரிக்காவில்கூட, இன்னும், 200 கௌன்டிகளில் வசிக்கும் 18,000,000 மக்கள் பொது

நூலகப்பணியின் நன்மையைப் பெறும லிருக்கிருர்கள்.

அமெரிக்க நூலகச் சங்கம் நூலகத் தர நிர்ணயம் செய்துள்ளது. அவை இவை: ஒவ்வொரு நபரும் ஓர் ஆண்டுக்கு குறைந்தது 3 டாலர்களாவது பொது நூலகப்பணிக்கென செலவழிக்க வேண்டும்.

ஆண்டுக்கு 5000 நூற்களைச் சேர்க்கும் 100,000 நூல்களைக் கொண்ட பொது நூலகமே தரமான நூலகம்.

நூலகர்கள்

அமெரிக்கப் பொதுநூலகங்கள் 7600ல் 21,000 பயிற்சி பெற்ற நூலகர்கள் உள்ளனர். இன்னும் நிறைய பேர் (பயிற்சி பெற்ருேர்) நூலகப் பணிபுரிய தேவைப்படுகிருர்களாம்.

அமெரிக்கப் பள்ளிகளில் நூலகப் பணியின் தரம் உயர்ந்துவிட்டது. அங்கு மலிவான நூல்கள் நிறைய வெளியாகின்றன. தனிப்பட்டவர்களின் நூல்கள் வாங்கும் சக்தி உயர்ந்துள்ளது. இக்காரணங்களால், பொது நூலகங்களில் வீட்டிற்குப் படிக்க எடுத்துச் செல்லும் நூல்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. அதனுல் நூலகப் பணி, நூலகக் கட்டிட சூழ்நிலைகள் மேலும் தரமாக சிறப்பாக அமைய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

நூலகங்கள், நூல்கள் அவற்றின் பயன்கள்

1960-62 கணக்குப்படி 35000 மக்களுக்கு மேல் பயன்படுத்தும் நூலகங்களிலிருந்து சேர்க்கப் பட்டு தொகுக்கப்பட்ட தகவல்கள் புள்ளி விபரங்கள் அமெரிக்காவில் இலவசப் பொது நூலகப் பணி அடைந்துள்ள பலன்களைத் தெளிவாகக் கூறுகிறது. அவை இவை ;

விபரம்	1960	1962
நூலகங்கள்	823	860
மக்கள் தொகை	112,556,000	118,094,000
நூல்கள்	130,638,000	163,269,000
ஆள் ஒன்றுக்கு நூல் விகிதம்	1.16	1.38
ஆண்டில் சேர்க்கப்பட்ட நூல்கள்	10,502,000	12,864,000
ஆள் ஒன்றுக்கு நூல் சேர்க்கப் பட்ட விகிதம்	0.09	0.11
நூல் விநியோகம் (கொடுத்து — வாங்கியவை)	454,706,000	523,960,000

அலுவலர்கள் மொத்தம்	35,464	40,662
தொழில் நூலகர்கள் எண்ணிக்கை	10,748	12,355
சதவிகிதம்	30.3	30.3

1965ல் கிடைத்த பொதுவான புள்ளி விபரம் இது :

பொது நூலகங்கள் 6783. பொது இயங்கு நூலகங்கள் 388 நூலகப்பணி பெறும் மக்கள் 181,000,000. அதன் சதவீதம் 90.6. நூல்இரவல்842,000,000 ஆள் ஒன்றுக்கு 4. நூலகச்செலவு ஆள் ஒன்றுக்கு 3-34 டாலர்கள். நூலக இயலின் ஐந்து விதிகளில் இரண்டாவது விதி-ஆளுக்கொரு நூல். இது அமெரிக்காவில் நடை முறைக்கு வந்து விட்டது.

எதிர்காலம்

பொதுவாக, அமெரிக்காவில் இலவசப் பொது நூலகப்பணி அனைவருக்கும் கிடைத்துள்ளது எனலாம். 'ஆளுக்கொரு நூல்' கொள்கை திருப்தி அளிக்கிறது.

பொது மக்களின் தூண்டுதல் கள், அமெரிக்க நூலகச் சங்கத் தின் விடாமுயற்சி, பதிப்பாளர் கள், கல்விமான்கள், அரசு, மற்ற நிறுவனஅதிகாரிகள் தங்கள் முழு ஆதரவையும் திரட்டித் தந்துள் ளனர். இத்தகைய இணைந்த முயற்சியின் பலனால் அனைவருக் கும் பொதுநூலகப்பணி கிடைத் துள்ளது.

நியூயார்க் பொது நூலகம்

இன்று அமெரிக்கா இலவசப் பொது நூலகங்கள் எண்ணிக் கையில் உலகிலேயே முதலிடம் வகிக்கிறது.

அமெரிக்க நாட்டிலேயே மிகப் பெரிய நகரம் நியூயார்க். இங்கு தான் நியூயார்க் பொது நூலக மும் உள்ளது.

அமெரிக்க நாட்டிலேயே மிகச் சிறந்த மாபெரும் பொது நூலக மாக, நியூயார்க் பொது நூலகம் திகழ்கிறது.

சமீபத்தில், இந்நூலகம், ஐரிஷ் நாடகாசிரியர் சீன் ஓ கேஸினின் கையெழுத்து, மற்றும் தட் டெழுத்து அசல் பிரதிகளை 1,00,000 டாலர்கள் கொடுத்து வாங்கி, தனது இருப்பில் சேர்த் துள்ளது. குறிப்பிடத்தக்கது.

அட்டை அங்கே விளக்கம் இங்கே

அமெரிக்காவில் பொது நூல கங்களிலே முதன்மையான நியூ யார்க் பொது நூலகக் கட்டிடத் தின் முன்பக்கத் தோற்றத்தை தான் இந்த இதழ் நூலகம் அட்டையில் கண்டு மகிழ்கிறீர் கள்.

★

ஜெகசிற்பியன்

க. நாராயணன்

திரு. ஜெகசிற்பியன் அவர்களைப் பேட்டி காணச் சென்ற போது, ஜன்னல் ஓரத்தில் அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார் அவர். என்னைக் கண்டதும் வழக்கமான புன்னகையை உதிர்த்து வரவேற்றார். ''நூலகம்'' இதழுக்குப் பேட்டி காண வந்திருப்பதாகக் கூறிய போது, தான் எழுதிக்கொண்டிருப்பதை ஒதுக்கி வைத்துவிட்டு, பேனாவையும் மூடி வைத்தார். ''ஏதோ அவசரமாக எழுதிக் கொண்டிருக்கிறீர்கள். என் வருகையால் தடைபட்டு விட்டதா?'' என்று கேட்டேன்.

''பொங்கல் மலர்'' வெளியிடும் சில பத்திரிகைகளுக்காக,

ஆசிரியர்கள் குறிப்பிட்ட கெடுவையும் தாண்டி, எழுதிக் கொண்டிருக்கிறேன். அதை அப்புறம் எழுதிக் கொள்கிறேன்.'' என்று உற்சாகமாகக் கூறிவிட்டு, என் கேள்விகளுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

''நீங்கள் எழுத்துத் துறைக்கு வந்த காரணமென்ன?''

''எழுதுவதற்காக!''

''முதன் முதலில் நீங்கள் எழுதிய சிறு கதை எது? அது எப்போது வெளி வந்தது?''

''1939ல் ''நல்லாயன்'' என்ற பத்திரிகையில் ''சுந்தரனின் சோபனம்'' எனும் சிறு கதையை எழுதினேன். அப்போது எனக்கு வயது பதினைந்து!''

''நீங்கள் முதலில் எழுதிய நாவல் எது?''

''1947-ம் ஆண்டு ''ஏழைமையின் பரிசு'' என்ற நாவலை எழுதினேன். என் சொந்தப் பத்திரிகையான ''சிற்பி''யில் அது தொடர்கதையாக வெளிவந்தது. அடுத்த ஆண்டில் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீ வாணி விலாசம் பிரசுரத்தார் புத்தகமாக வெளியிட்டார்கள். இப்போதைய நாடாளு மன்ற உறுப்பினரும், அப்போதைய ''காண்டீபம்'' ஆசிரியருமான திரு. எஸ். எஸ். மாரிசாமி அவர்கள் அந் நாவலுக்குச் சிறப்பான முன்னுரை எழுதினர். ''ஆனந்த விகட'' னில் பி. ஸ்ரீ. யும், ''பொன்னி'' யில் முருகு-சுப்பிரமணியனும் வெகுவாகப் பாராட்டி விமர்சனம் செய்தார்கள். தேச விடுதலைப் போராட்டத்தை மையக் கருத்தாகக் கொண்ட நாவல் அது. கதாபாத்திரங்களே தங்கள் கதையைச் சொல்லும் பாணியில் அமைந்தது''

''தங்களுடைய பத்திரிகையான ''சிற்பி'' எத்தனை ஆண்டுகள் வெளிவந்தது? அதை ஏன் நிறுத்தி விட்டீர்கள்?''

''1947-48-ல் ஒன்னரை யாண்டுகள் வெளிவந்த ''சிற்பி'' எல்லாப் பத்திரிகைகளையும் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியினால் நிறுத்தப்பட்டது''.

''நீங்கள் அதிகமாக எழுதியது சரித்திர நாவல்களா அல்லது சமூக நாவல்களா?''

''அதிகமாக எழுதியிருப்பவை சமூக நாவல்களே!''

''நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பது சமூக நாவல்களுக்கா அல்லது சரித்திர நாவல்களுக்கா?''

''நான் எழுதும் ஒவ்வொரு நாவலுக்கும்-அது சரித்திரமாயிருந்தாலும் சரி, சமூகமாயிருந்தாலும் சரி-முக்கியத்துவம் கொடுக்கிறேன். நானேமுக்கியத்துவம் கொடுக்காத ஒன்றை நான் எப்படி எழுதமுடியும்?''

''வாசகர்களின் கருத்துக்களை, அவர்களது விருப்பு, வெறுப்புக்களை நீங்கள் எப்படி அறிந்து கொள்ளுகிறீர்கள்?''

''அவற்றை அறிய நான் என்றுமே முயன்றதில்லை; எனக்குத் தேவையும் இல்லை; புத்தக வியாபாரிகளுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்கும்தான் அவை

தேவை. நான் எழுத்துக் கலைஞன்; சிந்தனையாளன். மேலும், இயற்கையிலேயே ஒரு சர்வாதிகாரிக்குரிய மனப்பான்மை உள்ளவன். (இத்தகைய மனோபாவம் தான் என்னை ஓர் இலக்கியக் கலைஞனாக உருவாக்கியிருக்கிறது என்று எண்ணுகிறேன்!) எனவே என்னுடைய எண்ணங்களையும், கொள்கைகளையும், முடிவுகளையும், விருப்பு, வெறுப்புக்களையும் வாசகர்களின் மீது சுமத்தவே முயல்கிறேன். நான் வாசகனின் அடிமை அல்ல; எனது சிந்தனையாலும், கலைத்திறனாலும் அவனை அடிமை கொள்ள விழையும் மன்னன்!''

''எழுத்துத் துறை நல்ல வருமானம் அளிக்கக் கூடியதா? அல்லது புகழும், கௌரவமும் மட்டும்தானா? அதை மட்டும் நம்பி வாழ முடியுமா?''

''ஓரளவு வருமானம் தரக் கூடிய துறைதான். ஆனால் அதை நம்பி வாழ்வதென்பது மிகமிகக் கடினம். நான் வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறேன். எனக்கு வந்துள்ள புகழும், கௌரவமும் என் முதுகுக்குப் பின்னால் நிற்கின்றன. அவற்றை நான் திரும்பிப் பார்ப்பதில்லை.''

''எவ்வகையினர் உங்கள் நூல்களை விரும்பிப் படிக்கின்றனர்?''

''எனக்குத் தெரியாது!''

''மக்களிடையே படிக்கும் பழக்கமும், புத்தகங்கள் வாங்கும் பழக்கமும் அதிகரித்திருக்கிறதா?''

''பத்திரிகை படிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது. ஆனால் இரவல் பழக்கம் இன்னும் போகவில்லை. புத்தகங்களை வாங்குவதற்குப் பதிலாக, ஐந்நூறு ரூபாய் சம்பாதிப்பவன் கூட ஒரு ரூபாய் புத்தகத்தை நாலு நடை நடந்து ஓசி கேட்கிறான்.''

'ஸென்ஸேஷனல்'

அமெரிக்காவில் பத்திரிகைகளுக்குப் பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள்தான் செய்தி. ஒரு சில பெரிய பத்திரிகைகளைத் தவிர மற்றவை இன்றும் 'ஸென்ஸேஷனல்' செய்திகளில் தான் வாழ்கின்றன.

இது அவர்களுக்கே உரிய பாணி.

''பத்திரிகை படிக்கும் பழக்கம் அதிகரித்திருக்கும் போது, புத்தகங்கள் படிக்கும் பழக்கம் அதிகமாகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?''

''தமிழகத்தில் 30 பைசா விலையுள்ள ஒரு பத்திரிகை $8\frac{1}{2}$ லட்சம் பிரதிகள் விற்பனையாகிறது. காரணம், பத்திரிகை படிப்பதை பொழுது போக்காகக் கொண்டிருப்பதுதான். ஆனால் ஒரு ரூபாய் விலையுள்ள நூல் 2000 பிரதிகள் விற்பது மிகவும் கடினமாயிருக்கிறது. புத்தகம் படிப்பது கலாரசனைக்காகவும், அறிவை அபிவிருத்தி செய்து கொள்ளுவதற்காகவும் தான். காலப்போக்கில் புத்தகங்கள் படிக்கும் பழக்கமும் அதிகமாகி விடும் என்றே நம்புகிறேன்.''

''ஒரு நாவலை எழுதிமுடிக்க உங்களுக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?''

''கால அளவை வைத்துக் கொண்டு நான் எதையும் எழுது வதில்லை. ஒரு நாவல் எழுதி முடிக்க மூன்று மாதங்களும் ஆகியிருக்கின்றன; மூன்று வருடங் களும் பிடித்திருக்கின்றன. ஒரே இரவில், அல்லது ஒரே வாரத் தில் ஒரு நாவலை எழுதி முடித்து விட்டதாகச் சிலர் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். அத் தகைய அசுர சாதனைகளை யெல் லாம் என்னால் சாதிக்க முடிவ தில்லை. நான் நிதானமாகச் சிந்திப்பவன்! அமைதியாகத் தொழிற்படுபவன்!''

''உங்களுடைய கதைகள் நாடகமாகவும், சினிமாவாகவும் வெளி வந்திருக்கின்றனவா?''

''என் கதைகள் சில, வேறு சிலரால், எனது அனுமதியுடன் நாடகமாக்கப்பட்டு, மேடை யேறியிருக்கின்றன. ''காணாத மனைவி'' என்னும் கதை ''கண் மலர்'' என்ற தலைப்புடன் நாடக மாகி, திருச்சியிலே பல முறை அரங்கேறி, மக்களின் பாராட் டைப் பெற்றுள்ளது. இது தவிர, கல்கியின் ''சிவகாமியின் சபதத்தை'' நாடகமாக்கி நடத் திய ஓர் அமெச்சூர் குழுவினர் எனது ''பத்தினிக் கோட் டத்தை'' அரங்கேற்றப் போகின் றனர். என்னுடைய ''ஜீவகீதம்'' நாவல் திரைப்படமாகிக் கொண் டிருக்கிறது. இப்படத்துக்கான வசனங்களை நானே எழுதுகி றேன்.''

''உங்கள் பெயர் எப்போது பிரபலம் அடையத் தொடங் கியது?''

''அதை நான் கவனித்துக் கணித்து வைத்திருக்க வில்லை.''

''உங்களுடைய எந்தப் படைப் புக்குப் பரிசளிப்பும், பாராட்டும் கிடைத்திருக்கிறது?''

''எனது ''திருச்சிற்றம்பலம்'' சரித்திர நாவலுக்கு நாவல் போட்டியில் ரூபாய் 5000ம் பரிசும், ''நரிக் குறத்தி'' என்ற சிறுகதைக்கு சிறுகதைப் போட்டி யில் ரூபாய் 500 பரிசும் ''ஆனந்தவிகடன்'' மூலம் கிடைத்தது. அந்தக் காலத்தில் (1948) ''கொம்புத்தேன்'' என்ற ஒரு குறு நாவலுக்கு ஒரு சவரன் பரிசு வழங்கப்பட்டது. ''நந்திவர்மன் காதலி'' நாவலுக் குப் பாராட்டு விழா நடத்தப் பட்டது.''

''நீங்கள் படைத்தவற்றில் உங்களுக்குப் பிடித்தமான நாவல் எது?''

''தெரியாது!''

''எழுத்துலகில் நீங்கள் யாரைப் பின்பற்றுகிறீர்கள்?''

''நான் முன்னோடி!''

''யார் எழுதிய நாவல்கள் உங்களுக்கு அதிகம் பிடிக்கும்?''

''எந்த நாவலாசிரியனையும் நான் விடாப் பிடியாகப் பிடித் துக் கொள்வதில்லை. ஏனென் றால், ஒரு நாவலாசிரியன் எழுதும் எல்லா நாவல்களுமே சிறப்பா யிருக்க முடியாது அல்லவா? நல்ல நாவல்களை யார் எழுதினாலும் எழுதியிருந்தாலும் படித்துப் பார்ப்பேன்.''

''சரித்திரக் கதைகள் எழுத வேண்டுமென்ற எண்ணம் ஏற் பட்டது எப்படி?''

"இதை நான் விரிவாகச் சொல்ல வேண்டும். ஆனால் அதற்கு இப்போது நேரமில்லை. மன்னியுங்கள்."

இதைப் பற்றி வாசகர்களுக்குச் சொல்ல வேண்டாமா என்று நான் கேட்டபோது, ஓய்வு கிடைக்கும் போது "நூலகத்தில்" வெளியிட ஒரு கட்டுரையே எழுதித்தருவதாக ஒப்புக் கொண்டார் திரு. ஜெகசிற்பியன்.

"இதுவரை உங்கள் நூல்கள் எத்தனை வெளி வந்துள்ளன?"

"நிறைய வெளி வந்துள்ளன; கணக்கு வைத்துக் கொள்ளவில்லை. ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். என்னுடைய முப்பதாம் வயதுக்குப் பிறகு எழுதி வெளிவந்துள்ள நூல்களில் மட்டுமே என்னை நீங்கள் முழுமையாகக் காணலாம். அப்படி வந்திருக்கும் நூல்களில் சிறுகதைத் தொகுப்புகள் 9. சரித்திர நாவல்கள் 10. சமூக நாவல்கள் 12."

"அதிகம் விற்பனையாகியுள்ள நூல் எது?"

"நந்திவர்மன் காதலி! ஐந்து ரூபாய் விலையுள்ள இந்நாவல் நான்கு பதிப்புகள் வெளி வந்த பிறகு "ராணிமுத்து"வில் மீண்டும் வெளி வந்துள்ளது, "ராணி முத்து" ஒரு லட்சம் பிரதிகள் விற்பனையாவது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்."

"பிற மொழிகளுடன் ஒப்பிடும் போது தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் எப்படியுள்ளது?"

"பிராவ்தா" செய்திப் பத்திரிகையின் முதல் இதழ் 1912ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் நாளில் வெளியானது. சிறப்புக்குரிய தலை சிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளர், ஆசிரியர், புரட்சிகரப் பிரச்சாரத்தின் தன்னிகரில்லாத்தலைவர் லெனின் தான் இதனை நிறுவியவரும், முதல் ஆசிரியருமாகும்.

மே 5-ஆம் நாள் சோவியத் யூனியனில் பத்திரிகை தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

— சோவியத் செய்தி

"உதட்டைப் பிதுக்க மாட்டேன்; 'ஓகோ' என்றும் சொல்ல மாட்டேன்."

"நூலகங்களுக்குச் செல்வதுண்டா? அவை இயங்கி வருவது பற்றி உங்கள் கருத்தென்ன?"

"1942-ம் ஆண்டு முதல் ஓர் ஐந்துவருட காலம் நான் நூலகங்களிலேயே வாழ்ந்தேன் என்று சொல்லலாம், வேப்பேரி பவானந்தர் கழகத்தைச் சார்ந்த நூலகம், கன்னிமாரா நூலகம், அடையாறு பிரும்ம ஞான சபையின் நூலகம் — இவையே என் அறிவை வளர்த்த திருக்கோயில்கள். இப்போதெல்லாம் அதிகம் போக முடிவதில்லை. அவசிய அவசரத்துக்காக மட்டும் போகிறேன். நூலகங்கள் இயங்குவது பற்றி என்னிடம் பல கசப்பான கருத்துக்கள் உள்ளன. அவை இப்போது வேண்டாமே! பிறகு பார்ப்போம்,"

"நூல் பதிப்பாளர் பற்றியும், நூல் விற்பனை பற்றியும் நீங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராய மென்ன?"

""தமிழ் நூல் பதிப்பாளர்களில் யோக்கியமும், நேர்மையும், சத்தியமும், அறிவும், பண்பும், தாராள மனமும் கொண்ட சிலர் இருக்கிறார்கள். அதர்ம வழிகளில் பணம் பண்ணுவதையே ஒரு கலையாகப் பயின்று, அதைத் திறமையெனப் பறை சாற்றிக் கொண்டு உலவும் தகிடுதத்தப் பேர்வழிகள் பலரையும் நான் அறிவேன். இவ்விஷயத்தை இதற்குமேல் கிளறிக் கேட்காமல் விட்டு விடுங்கள். அடுத்து நூல் விற்பனை பற்றிக் கேட்கிறீர்களா? இதை எந்தக் கோணத்தில் நின்று பதில் சொல்வதென்று எனக்குக் குழப்பமாயிருக்கிறது. ஏனென்றால் இதற்குப் பல கோணங்கள் இருக்கின்றன!"

""இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?"

""நான் யாருடைய அறிவுரைகளையும் கேட்டுக் கொண்டு எழுத வந்தவனல்ல. எனவே, என்னுடைய அறிவுரைகளும் பிறருக்குத் தேவைப்படா. படைப்பிலக்கியத் தொழிலுக்குப் பிறரின் அறிவுரைகள் பயன்படுவதில்லை."

பேட்டி முடிந்தது. என் கேள்விகளுக்கு இன்னும் விரிவாகவே பதில் கூற விரும்பினார். அதே சமயத்தில் சர்ச்சைக் கிடமான கேள்விகளைத் தவிர்க்கவும் விரும்பினார். பேசும் போதே கூச்சமும், சங்கோஜமும் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் சிரித்துக் கொள்கிறார். ஆனால் அவர் சொல்ல விரும்புவதை ஆணித்தரமாக, உறுதியாகச் சொல்கிறார். அடிக்கடி அவருடைய கருத்துக்கள் ""நூலக""த்திலும் இடம் பெறும் என்று உறுதி பெற்றுக் கொண்டு நான் விடை பெற்றேன்.

வரி விளம்பரங்கள்

இப் பகுதியில் வெளியாகும் வரி விளம்பரங்களுக்கு வரி ஒன்றுக்கு ரூ 0.50 வீதம் வசூலிக்கப்படும். குறைந்த கட்டணம் ரூ. 3-00

விபரங்கட்கு
நிர்வாகி ''நூலகம்''
14, தனிகாசலம் செட்டி ரோடு
சென்னை-17

வசதியாகத் தங்குவதற்கு லாட்ஜ்.

நாகர் கோயில் வரும் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான இடம் ''கைலாஸ் லாட்ஜ்'' பஸ் நிலையம் சமீபம், மீனாட்சிபுரம், நாகர் கோயில்-1

Kailas Lodge
Meenakshipuram
Nagercoil – 1
Phone. 239

கல்லூரி, பள்ளி புத்தகங்கள்

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி நூலகங்களுக்குத் தேவையான ஆங்கிலம், தமிழ்ப் புத்தகங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

Xcel - Choix
Book Sellers & Publishers
114, Poonamallee High Road
Madras - 29.

இந்திய நூலகத் தந்தை
டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்

இரா. முத்துக்குமாரசாமி

2

தரணியில் சிறந்தது தஞ்சை. அத்தஞ்சை மாவட்டத்தில் விளங்கும் திருவூர் 'சீர்மல்கு சீர்காழி' 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்று இறைவனைப் பற்றிக் கூறுகின்ற நிலையில் இறைவனைக் கண்டவர்; கண்டு அவன் கோலம் இது என்று 'தோடுடைய செவியன்' என்ற திருப் பாடலில்விண்டவர் அருள் ஞான சம்பந்தர். அவர் பிறந்த ஊர் சீர்காழி. 'கற்றல் கேட்டலுடையார்கள் வாழ்கலிக் காழி' என்று ஞானசம்பந்தப் பெருமானே பாடியது போலக் கல்வியறிவும் கேள்வியறிவும் மிக்க மக்கள் வாழும் சீர்காழியிலே தோன்றியவர்தான் டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்.

ஊர் சீர்காழி; தெரு வடக்கு மடவிளாகத் தெரு; வீடு டாக்டர் ரங்கநாதனுடைய தாய் வழிப் பாட்டனுருடையது. நந்தன ஆண்டு; ஆடி மாதம்; காயத்திரி வழிபாட்டு நாள்; அறிந்தோ அறியாமலோ செய்த பிழையனைத்தையும் பொறுத்துக் கொள்க என்று அந்தணர் யாவரும் மந்திரமோதி இறைவனையும் இறைவியையும் வழிபட்டுக் கொண்டிருந்த நேரம்; காலை 9-30 மணி; நூலகங்கள் நடத்தும் முறையை ஒரு கலையாக்கி, அதைப்பற்றிய அறிவை இயலாக உயர்த்தி, அனைத்துலக நூலகத் துறையில் தமக்கென ஒரு தனி இடத்தைத் தேடிக் கொள்ளவிருந்த டாக்டர் ரங்கநாதன் தோன்றினுர்.

'ரங்கா' என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப் பெற்ற டாக்டர் ரங்கநாதனின் தந்தையார் இராமாமிருதம் ஐயர்; தாயார் சீதாலட்சுமி அம்மையார். பிள்ளையில்லையே என்று வருந்திக் கொண்டிருந்த பெற்றோர்க்குப் பிள்ளைக்கலி தீர்க்க முதல் மகனுகத் தோன்றினுர் ரங்கநாதன். தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலம் தாலுக்காவைச் சார்ந்த உபய வேதாந்த

புரத்தில் தமக்கிருந்த ஓரளவு நிலத்தை மேற் பார்த்துக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தார் தந்தை இராமாமிருதம். பண்பிலும் படிப்பிலும் சிறந்து விளங்கிய அவர் மாலை நேரங்களில் இராமாயணச் சொற்பொழிவுகள் நடத்துவது வழக்கம். இதே பண்பு பின்பு டாக்டர் ரங்கநாதனிடமும் ஊறியிருந்தது. மேலைநாடுகளுக்கு நூலக மாநாடுகளில் கலந்து கொள்ளச் சென்ற போதெல்லாம் மாலை நேரங்களில் நெருங்கிய நண்பர்களைச் சூழ வைத்துக்கொண்டு இராமாயணச் சொற்பொழிவுகள் ஆற்றுவதுண்டு. நூலக இயலில் அவருக்குள்ள பேரறிவைக் கண்டு வியக்கும் நண்பர்கள் அவர் தம் இராமாயணச் சொற்பொழிவுகளிலுள்ள இலக்கியச் சுவையிலும் மூழ்கித் திளைப்பர். தாயார் சீதாலட்சுமி அம்மையாரோ அடக்கமே உருவானவர்.

டாக்டர் ரங்கநாதனுக்கு எழுத்தறிவிக்கும் விழாவைச் சிறப்பாக முடித்துவைத்த தந்தையார் அவரைச் சீர்காழிக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த பள்ளியில் சேர்த்தார். 'ரங்கா'வின் தாய்வழிப் பாட்டனாரின் தம்பியார் ஒரு பள்ளியாசிரியர். 'ரங்காவை உங்கள் பொறுப்பில் விட்டுச் செல்கிறேன். இவனுக்கு நல்லறிவை யூட்டி முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது உங்கள் உதவியாக இருக்கட்டும்' என்று ரங்கனின் கையைப் பிடித்து அவரிடம் ஒப்படைத்தார் இராமாமிருதம். மீண்டும் தம் சொந்த ஊருக்குத் திரும்பிய பெரியவர் இராமாமிருதம் திடுமென நோயுற்றார். காலனின் கொடிய கரங்கள் அவர்மீது விழுந்தன. அப்பிடியினின்று அவர் மீளவே யில்லை.

நூலக சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து விட்டீர்களா? இல்லை என்றால் உடனே உறுப்பினராகுங்கள். ஒற்றுமையே வலிமை. உணருங்கள். உடன் செயல் படுங்கள்.

'தந்தையோடு கல்விபோம்' என்பது முதுமொழி. அதைப் பொய்யாக்கிவிட்டார் டாக்டர் ரங்கநாதன். தாயின் அரவணைப்பில் தம் கல்வியைப் பயின்றார். தந்தையில்லாத குறையை மகன் உணராதவாறு பார்த்துக் கொண்ட அன்னையார் மகன் கூடவே தம் வாழ்நாள் முழுவதையும் கழித்தார். எண்பத்தி நான்காவது வயதில் அவ் அம்மையார் தம் மகனுடன் டில்லியிலிருந்த பொழுது எதிர்பாராது ஏற்பட்ட நிகழ்ச்சியால் மறைவுற்றார்.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த ரங்கநாதன் எல்லா வகுப்புகளிலும் முதலிடம் பெற்றார். அவர் சிறந்த பேரறிஞராகப் பின்னால் திகழ்ந்ததற்குக் காரணமாயிருந்தவர்கள் இரண்டு ஆசிரியர்கள். ஒருவர் அனந்தராமையர். மற்றவர் திருவேங்கடாசாரியார். முன்னவர் சைவர்; பின்னவர் வைணவர். அனந்தராமையர் சைவ நாயன்மார்களின் கதைகளையும் சிவத்தலங்களின் வரலாறுகளையும் ரங்காவிற்கு விளக்கமாக எடுத்துக் கூறுவார். ஆழ்வார்களின் அரிய பாசுரங்களிலடங்கியுள்ள சுவைகளையும் வைணவத் தலங்களின் பெருமையையும் எடுத்துக்

கூறுவார் திருவேங்கடாசாரியார். ரங்காவிற்கு இரண்டிலும் ஈடு பாடு. இருவர் கூறுவதையும் கேட்டுத் தம் பக்திப்பேருணர்வை வளர்த்துக் கொண்டார்.

நூலக இயலில் பேரறிஞராக விளங்கவிருந்த ரங்கநாதன் படித்த பள்ளிக்கூடத்தில் நூலகம் என்பது கிடையாது. அவர் படித்து வந்த சபாநாயக முதலி யார் இந்து உயர்நிலைப் பள்ளி இருந்த சீர்காழி ஊரிலேயே நூலகம் கிடையாது. அவர் படித்துவந்த பள்ளியில் ஒரு சுவர்ப்பேழை உண்டு. அதில் சில புத்தகங்கள் அடுக்கப்பட்டிருக் கும். அவை பொது நூல்கள் அல்ல; பழைய பாடப் புத்த கங்கள்.

ரங்கநாதனின் அறிவு வளர்வ தற்கு உதவியாக இரண்டு நட மாடும் நூலகங்கள் விளங்கின. அந்நூலகங்கள் முன்பு குறிப் பிட்ட இரண்டு ஆசிரியர்களே. அவ்விருவரும் ரங்கநாதன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் முகம் கோணுது மகிழ்ச்சியோடு விடை யளித்தனர். அவர்கள் கூறிய வற்றையெல்லாம் பிற்காலத்தில் ரங்கநாதன் நூல்களில் படித்த பொழுது அவர்களுடைய அறி வுத்திறத்தை எண்ணி வியப்ப துண்டு.

மெட்ரிகுலேசன் தேர்வில் முதல் வகுப்பில் தேர்வு பெற்றுர் ரங்கநாதன். அத்தேர்வு எழுதிய பொழுது அவருடைய உடல் நலம் மிகக் குன்றியிருந்தது. வருந்திப் படித்துத் தேர்வு எழுதி ஞல் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற நிலை; பள்ளித் தலைமையாசிரியர் அவர் மேலி ருந்த அன்பின் காரணமாகக் கடுமையாகப் படிக்கவேண்டாம் என்று கண்டித்தார். ஆனுல் ரங்கநாதனே படிப்பதை நிறுத்த வில்லை. படுக்கையில் படுத்துக் கொண்டே தம் நண்பரைக் கொண்டு பாடத்தைப் படிக்கச் சொல்வார். பாடத்தின் கருத் துக்களைத் தம் மனத்தில் பதித் துக்கொள்வார். தேர்வு எழுதி ஞர். முதல் வகுப்பில் தேறிஞர்.

மேலே தொடர்ந்து படிக்க விரும்பிய ரங்கநாதன் சென்னை வந்து சேர்ந்தார். கிறித்துவக் கல்லூரியில் விண்ணப்பம் போட் டிருந்தார். அப்பொழுது அக் கல்லூரியின் முதல்வராக விளங் கியவர் டாக்டர் ஸ்கின்னர். கல்லூரியில் இடம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற கவலை யோடு கல்லூரி முதல்வரின் அறைக்கு முன்னிருந்த கூடத்தில் ஒரு மூலையில் நின்று கொண் டிருந்தார் ரங்கநாதன். பரந்து கிடந்த சென்னையை அவர் பார்ப் பது முதல் முறை. கல்லூரி வாசலில் காலடி வைப்பது முதல் முறை. இனம் புரியாத மனக் கலக்கம்; வெள்ளைக்கார முதல் வரின் முன் நிற்கப் போகிறேமே என்ற வெட்கம். இத்தனை உணர்ச்சிப் போராட்டத்திற் கிடையில் ஒதுங்கிக்கிடந்த ரங்க நாதனை அறைக் குள்ளிருந்து வெளியே வந்த டாக்டர் ஸ்கின் னர் தோள்மேல் கைபோட்டு அறைக்குள் அழைத்துச் சென் ருர். எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பு எண்கள் பெற்றிருப் பதைப் பார்த்துவிட்டு உடனே இடமளித்துவிட்டார் முதல்வர்.

இடைநிலைத் தேர்விலும் இளங் கலைத்தேர்விலும் முதல் வகுப்பில் தேறிய ரங்கநாதன் அக் கிறித்து வக் கல்லூரியிலேயே முதுகலை வகுப்பில் சேர்ந்து கணிதத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தார். அப்பொழுது அவ ருக்குப் பேராசிரியராக விளங்கி

யவர் பேராசிரியர் எட்வர்ட் பி ராஸ். அந்த ஆண்டு ரங்க நாதன் மட்டுமே அவரிடம் படித்தார். எனவே ஆசிரியரும் மாண வரும் மிக நெருங்கிப் பழகினர். பேராசிரியர் பாடத்தை நடத்து வதற்கு வகுப்பறையை நாடுவ தில்லே. ஓராசிரியர் — ஒரு மாண வர் என்ற நிலேயிருந்ததால் வகுப்பு தாழ்வாரத்தில் — படிக் கட்டுகளில் — பேராசிரியர்அறை யில் — என்று எங்கு வேண்டுமா னுலும் நடக்கும். பேராசிரியரை ரங்கநாதன் மிகமிகப் போற்றி வந்தார். அவர்கள் தொடர்பு கல்லூரியளவில் நில்லாது ரங்க நாதன் சென்னேப் பல்கலேக்கழக நூலகராகப் பணியேற்ற பின்னர் கூடத் தொடர்ந்து வந்தது. இவ்விருவரின் பேரறிவாற்றலின் பயனுகவே 'நூலக இயலின் ஐந்து விதிகள்' தோன்றின. அந்த ஐந்து தொடர்களும் அமை வதற்குத் தம் பேராசிரியர் மிக உதவியாக இருந்ததை டாக்டர் ரங்கநாதன் பல விடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக எம். ஏ. தேர்வு நெருங்கியது. படிப்பில் ரங்க நாதன் முதல்வராக இருந்தும் கூடத் தேர்வு என்பது என்றுமே அவருக்குப் பல சோதனேகளே விளேவித்துக் கொண்டே யிருந் தது. 1906இல் அவர் மெட்ரி குலேசன் தேர்வு எழுதிக்கொண் டிருந்தார். கணக்குத் தேர்வு நாள். உடல்நலக் குறைவின் காரணமாக அவர் குதிரை வண்டியில் தான் தேர்வு எழுதச் செல்வார். அன்று வண்டியில் பாதி தொலேவு சென்றிருப்பார். குதிரைக்கு என்ன தோன்றி யதோ தெரியவில்லே; நேராகத் திரும்பி அவர் வீட்டுக்கே கொண்டுவந்து விட்டுவிட்டது. மறுபடியும் அவர் தேர்வுக் கூடத் திற்குச் செல்வதற்குள் 25 நிமி டங்கள் தாமதமாகிவிட்டது.

அவ்வாறே அவர் இடைநிலேத் தேர்வு எழுதியபோதும் எதிர் பாராத இடையூறு ஏற்பட்டது. அப்போது அவர் சைதாப்பேட் டையில் ரயில் நிலேயத்திற்கு மேற்குப்பக்கத்தில் குடியிருந்து வந்தார். தேர்வு எழுத வேண் டிய இடம் சென்னே மாநிலக் கல்லூரி. இப்போது இருப்பது போல அன்று பேருந்து வசதிகள் கிடையாது. குதிரை வண்டியில் தான் அவர் செல்வது வழக்கம். அப்படிச் செல்வதற்கு அவர் இரயில் பாதையைக் கடந்து

சோவியத் யூனியனில் 65 மொழிகளில், அகில யூனியன், குடியரசு, பிரதேச, பிராந்திய, நகர, மாவட்ட, தொழிற்சாலே மட்டங்களில் ஏராளமான பிரதி கள் விற்பனேயாகும் சுமார் எட் டாயிரம் பத்திரிகைகள் வெளியா கின்றன. அவற்றின் அன்ருட பிரதிகள் 12 கோடியே 60 இலட் சம் பிரதிகளேயும் மிஞ்சிவிட்டது. 1913 ஆம் ஆண்டுடன் ஒப்பிடு கையில் பத்திரிகைகளின் பிரதி களின் எண்ணிக்கை 34 மடங்குக் கும் மேலாக அதிகரித்து இருக் கிறது.

செய்தித்தாள்கள், சஞ்சிகை கள் விற்பனேயில் சோவியத் யூனி யன் உலகிலேயே இரண்டாம் இடத்தை வகிக்கிறது.

—சோவியத் செய்தி

தான் செல்லவேண்டும். அதைக் கடப்பதற்குச் சைதாப்பேட்டை இரயில் நிலையத்திற்கு இரு பக்கத்திலும் இரண்டு வழிகள் இருந்தன.

ஒருநாள் ஒரு வழியில் செல்லும்போது கதவு மூடியிருந்தது. பத்து நிமிடங்கள் பொறுத்தபின் அவர் வண்டியை அடுத்த வழிக்குச் செலுத்தச் சொன்னர். அவர் போவதற்கும் அதன் கதவு மூடுவதற்கும் சரியாக இருந்தது. ஐந்து நிமிடங்கள் பொறுத்துப் பார்த்தார். அவ்வழியாக வந்த சரக்குத் தொடர் நின்றுவிட்டது. அசைவதாகத் தெரியவில்லை. பொறுமை யிழந்த ரங்கநாதன் மறுபடியும் முதல் வழிக்கே போகச்சொன்னர். இப்படி முன்னும் பின்னுமாக அலைந்ததன் பயன் அரைமணி நேரமாவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன் — அதாவது 28நிமிட நேரம் தாமதமாகத் தேர்வுக் கூடத்திற்குள் நுழைந்தார்.

பி. ஏ. தேர்வும் ரங்கநாதனை விட்டுவைக்கவில்லை. ஒரு நாள் தேர்வு எழுதும்போது நேரம் போவது தெரியாமல் எழுதிக் கொண்டிருந்தார். மொத்தம் ஐந்து கேள்விகட்கு அவர் விடையெழுதவேண்டும். இரண்டு கேள்விகட்கு விடையெழுதியபின் ஆசிரியரிடம் மணி கேட்டார். இன்னும் ஒருமணி பத்து நிமிடம் இருப்பதாகக் கூறினர் அவர். எழுபது நிமிடங்களில் எப்படியாவது மூன்று கேள்விகளுக்கும் விடை யெழுதிவிடலாம் என்று எழுதத் தொடங்கினர். ஆனல் அடுத்த பத்தாவது நிமிடத்தில் மணி அடித்தது. விடைத் தாள்கள் திரும்ப வாங்கப்பெற்றன. ஐந்து மதிப்பெண்கள் குறைந்ததனல் முதல் வகுப்பு பெறும் வாய்ப்பை ரங்கநாதன் இழந்தார்.

கணக்குத் தேர்வு எம். ஏ. தேர்விலும் அவரை விடவில்லை. ஒருநாள் அவர் மட்டுமே தனியாகத் தேர்வு எழுத வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 300 பேர் அமரக்கூடிய பெரிய தேர்வுக் கூடத்தில் ரங்கநாதன் மட்டும் தனியாக உட்கார்ந்து தேர்வு எழுதிக் கொண்டிருந்தார். அவர் எழுதுவதை மேற்பார்வையிட இரு தேர்வாளர்கள் இருந்தனர். அவர்கள் அவர்பக்கத்தி லமர்ந்து மூன்று மணி நேரமும் 'சளசள' வென்று பேசித் தீர்த்தார்கள். அடக்கமே உருவான ரங்கநாதனுக்கோ அவர்கள் பேசுவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள அச்சம். முடிவு — ரங்கநாதன் மூன்றும் வகுப்பில் தேறினர்.

ஒவ்வொரு முறையும் தேர்வு தம்மைப் பழி வாங்குவதைக் கண்ட ரங்கநாதன் லண்டன் மாநகரில் நூலகப் பயிற்சித் தேர்வு நடந்தபொழுது அத் தேர்வையே பழிவாங்கிவிட்டார். அவர் தேர்வு எழுதுவதற்கே அமரவில்லை. ஓராண்டுக் காலம் எந்த டிப்ளமோவைப் பெற வேண்டுமென்று படித்தாரோ அதைப் பெருமலேயே தாயகம் திரும்பினர். இறுதியில் ரங்கநாதனே வெற்றி பெற்ருர். எப்.எல்.ஏ. என்ற பட்டம் அவர் வீடு தேடிச் சென்னை வந்து சேர்ந்தது.

கணிதத்துறையில் எம். ஏ., பட்டம் பெற்ற ரங்கநாதன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியப் பயிற்சி பெற்ருர் அச்சமயம் அவர் கணிதவியல் சங்கத்தின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அச்சங்கத்தின் தொடக்க விழா வைச் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. விழாவிற்குப் பெரியார் பலரும் மாணவர்களும் வந்திருந்தனர். வரவேற்புரை, தொடக்கவுரை, சிறப்புரை அனைத்தும் முறையே நிகழ்ந்தன. நன்றியுரை கூறவேண்டிய கட்டம் வந்தது. ஆசிரியரையே நன்றியுரை கூறச்சொன்னார் ரங்க நாதன். ஆனால் ஆசிரியர் மறுத்து விட்டார். நன்றியுரை கூற வேண்டியது செயலாளரின் கடமை என்று தட்டிக் கழித்து விட்டார். ரங்கநாதனே தயங்கினார். கூட்டம் நன்றியுரைக்காகக் காத்திருந்தது.

நூலகவியல் பற்றிய உலக மாநாடுகள் பலவற்றில் இன்று தங்கு தடையின்றி அருவி கொட்டுவதுபோல ஆங்கிலத்தில் அருமையாகச்சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்ற டாக்டர் ரங்க நாதன் அன்று தயங்கினார்; அதற்குக் காரணமிருந்தது.

சிறு வயதிலிருந்தே டாக்டர் ரங்கநாதனுக்குத்திக்குவாய். ஒரு சொல்லைச் சொல்லுவதற்கு முன் பலமுறை திக்கும். திக்கித் திணறிச் சாதாரணமாகப் பேசும் ரங்கநாதனை ஆசிரியர் நன்றியுரை கூறவேண்டுமென்று பணித்து விட்டார்.

என்ன செய்வதென்று அறியாது திகைத்தார் அவர். சாதாரணமாகப் பேசினாலேயே கேலி செய்யும் மாணவர்கள் நன்றியுரை முழுவதையும் திக்கித் திணறிப் பேசினால் பொறுத்துக் கொண்டா இருப்பார்கள். அக் கட்டிடமே சிரிப்பால் அதிர்ந்து விடும். பேசாமல் விட்டு விடலா மென்றால் ஆசிரியரின் கண்டிப்பு அவரை அச்சுறுத்தியது. வேறு வழியின்றி மேடைமேலேறினார். கண்களை மூடிக்கொண்டார்.

ஐவர்க்கு மனைவியாகி அரும் பெரும் பத்தினியாய் வாழ்ந்த திரௌபதியின் துகிலைத் துரியோதனனுதியர் முன்னிலையில் துடுக்குத் தனமிக்க துச்சாதனன் உரிந்த காலை அவள் எப்படி அஞ்சனம் வழிந்த கண்ணளாய்க் கண்களை மூடிக்கொண்டு 'கண்ணா, கண்ணா' என்று கதறினாளோ அதேநிலையில் ரங்கநாதன் கண்களை மூடிக் கொண்டு 'கண்ணா, கண்ணா' என்று தமக்குள்ளே கூவினார்.

கண்களை மூடிக் கொண்டு வாய்க்கு வந்த வார்த்தைகளை வைத்துக் கொண்டு பேசினார். திக்கித் திணறி வருமென்று நினைத்த பேச்சு தடதடவென்று அருவிபோல் கொட்டியது. மாணவர்களின் கைதட்டலுக்கிடையே அவர் தம் நன்றியுரையை முடித்தார். திக்குவாய் ரங்கநாதன் பேச்சிலே தீரரானார்.

(வளரும்)

★

பேப்பர் பாக்ஸ்

1958-ம் ஆண்டு மட்டும் அமெரிக்காவில் 90 கோடிப் புத்தகங்கள் விற்பனையாகி இருக்கின்றன. சராசரி ஒவ்வொருவரும் ஐந்து புத்தகங்கள் வாங்கியிருக்கிறார்கள். இவற்றில் பெருவாரியானவை 'பேப்பர் பாக்ஸ்' எனப்படும் காகித அட்டைப் புத்தகங்களே.

தகழி சிவசங்கரப் பிள்ளை

மணவை முஸ்தபா

மகாகவி வள்ளத்தோலுக்குப் பிறகு இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாடுகள் பலவற்றிலும் நன்கு அறிமுகமாகி ஓங்கு புகழ் எய்தியுள்ள மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரப் பிள்ளையே யாவார். மொழி, நாடு என்ற எல்லைகளையெல்லாம் கடந்து தம் எழுத்தாற்றலை வெளிப்படுத்தியுள்ள தகழி இன்றைய மறுமலர்ச்சி மலையாளக் கதை இலக்கியத் துறையின் எல்லைக் கல்லாக - இலட்சிய உருவாகத் திகழ்கிறார் எனில் அஃது மிகையன்று.

சுமார் அறுபது சிறுகதைகளும், இருபது புதினங்களும், ஒருநாடகமும், சுயசரிதமொன்றும், பயண நூலொன்றும் எழுதியுள்ள தகழி சிறுகதை எழுத்தாளர் என்பதை விடப் புதினப் படைப்பாளர் என்ற முறையிலேயே எழுத்துலகில் பெரிதும் மதித்துப் போற்றப் படுகிறார்.

பிறந்த ஊரின் பெயரான 'தகழி' என்ற சிறப்புப் பெயராலேயே அழைக்கப்படும் சிவசங்கரப் பிள்ளை கேரளாவிலுள்ள அம்பலப்புழாவிற் கருகிலுள்ள 'தகழி' கிராமத்தில் வேளாளர் குலத்தைச் சார்ந்த சங்கரக்குருப் பிற்கும் பார்வதியம்மாளுக்கும் 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதி பிறந்தார்.

தகழி, அம்பலப்புழா, கருவாட்டா ஆகிய இடங்களில் தம் இளமைக் கல்வியை முடித்துக் கொண்ட அவர், பின்னர் திருவனந்தபுரத்திலுள்ள சட்டக் கல்லூரியில் பயின்று வழக்குரைஞர் (Pleader) பட்டம் பெற்று அம்பலப்புழாவில் வழக்குரைஞராகத் தொழிலைத் தொடங்கினார். 1960ஆம் ஆண்டிற்குப்பின் அப் பணியைக் கைவிட்ட அவர் இன்று எழுத்துப் பணியையும் உழவுப் பணியையும் தனது இரு கண்களாகக் கொண்டு திறம்பட ஆற்றி வருகிறார்.

இளமையிலேயே கவிதை புனையத் தொடங்கிய தகழியின் கலையார்வம் சிறுகதைகளையும் பின்னர் புதினங்களையும் எழுதத் தூண்டியது. இயற்கையிலேயே கற்பனை வளமும் எழுத்துத் திறமையும் வாய்க்கப்பெற்ற தகழி

யின் படைப்பாற்றலை ஒருமுகப் படுத்திப் பூரணமாகப் பரிண மிக்கச் செய்தவர்களில் மிக முக்கியமானவர்கள் அக்கால இலக்கிய உலகில் பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்த கேசரி ஏ.பால கிருஷ்ணப்பிள்ளையும், கைனிக்கர குமாரப்பிள்ளையும், ஈ. வி. கிருஷ் ணப் பிள்ளையுமாவர்.

கால காலமாகச் சமுதாயத்தில் புரையோடிப்போன மூட நம்பிக் கைகளையும் போலிக் கொள்கை களையும் தகர்த்தெறிவதோடு சமூக முன்னேற்றத்தைத் தடுத்து வரும் அநீதிகள் அனைத்தையும் களைந்தெறிந்து புதிய உணர்வு களையும், கொள்கைகளையும் மக்க ளிடையே ஊட்டி, சமுதாயப் புத்தெழுச்சிக்கு வித்திடும் விசைக் கருவியெனத் தம் எழுத்தையும் பேச்சையும் பயன்படுத்தி வந்த அன்றைய இலக்கிய உலகின் விடிவெள்ளியான கேசரி ஏ. பால கிருஷ்ணப் பிள்ளையின் நெருக்க மான அரவணைப்பில் வளர்ந்து வந்த தகழி, தன் ஆசானின் வழி யில் சமுதாயக் கோணல் நிலைகளை அப்பட்டமாகச் சித்தரிக்கும் கதைகளைப் புனையத் தொடங்கி, அத்துறையில் விரைவிலேயே மிக வேகமாக பீடுநடை போட்டு, மலையாளக்கதையிலக்கியத் துறை யில் ஒரு புதிய மாற்றத்திற்கு வழி வகுத்தார்.

அவர் எழுதத் தொடங்கிய காலத்தில் சமுதாயத்தில் ஆட்சி செலுத்தி வந்த சமூக அநீதிகள், ஏழை எளியவர்களின் இன்னல் கள், சமயப் போர்வையில் நடக் கும் ஊழல்கள், பணம் படைத் தோர் தரும் தொல்லைகள், துன் பங்கள், தூய காதலுக்கு இடப் படும் தடைகள், ஒடுக்கப்பட்ட மக்களிடையே காணப்பட்ட துன்ப துயரங்கள் ஆகியவை களைக் கருவாகக் கொண்ட கதை களைப் புனைந்து தன் படைப்புகளை உருவாக்கி உலவவிட்டார் தகழி.

தகழியின் படைப்புக்களின் உயிர்நாடியாக விளங்கும் தனிப் பெரும் அம்சம் வாழ்க்கையை அப்பட்டமாக உணர்ச்சி பூர்வ மாகப் பிரதிபலிப்பதேயாகும்.

பிரத்தியட்ச சமூகப் புதி னத்தை இலக்கிய அளவுக்கு உயர்த்திய தகழியின் வழியைப் பின்பற்றி, இலக்கியப் படைப்பு களை உருவாக்கும் இளம் எழுத் தாளர் பரம்பரை யொன்றே இன்று இலக்கிய உலகில் தோன் றிக் கொண்டிருக்கிறது எனத் துணிந்து கூறலாம்,

தகழியின் தொடக்க காலப் புதினப் படைப்பான 'தோட்டி யுடே மகன்' (தோட்டியின் மகன்) என்ற படைப்பில் தோட்டிகளின் துயர வாழ்க் கையை உள்ளத்தைத் தொடும் வண்ணம் உருக்கமாகச் சித்தரிக் கிறார். 'ரெண்டிடங் கழி' (இரண்டுபடி) என்ற புதினத்தின் வாயிலாக நிலமில்லாத ஏழை உழவனொருவன் ஆலப்புழைக் கருகிலுள்ள சதுப்பு நிலங்களில் படும் துயரங்களை நெஞ்சை உலுக்கும் வகையில் படம் பிடித் துக் காட்டுகிறார். சிறந்த பாத் திரங்களைப் படைத்து அவற்றைத் திறம்படக் கையாண்டு கதை புனையும் ஆற்றலில் தகழி எவ் வாறு இமயம்போல் விளங்கு கிறார் என்பதற்குக் கட்டியங் கூறும் புதினமே 'செம்மீன்' (எரு — கடல் வாழ் மீன்களில் ஒரு வகை) ஆகும். ஆலப்பு ழையை அடுத்துள்ள கடற்கரைப் பகுதிகளில் வாழும் மீனவப் பெண்ணொருத்திக்கும் முஸ்லீம் இளைஞனொருவனுக்கும் இடையே தோன்றி வளர்ந்த காதல் கதை யைச் சித்தரிக்கிறது இது. இயற்

கையான வர்ணனைகளுடன் காதலின் திறத்தை விளக்கியுரைக்கும் இப்புதினம் 1956ஆம் ஆண்டிற்கான சாகித்திய அக்காதெமிப் பரிசைப் பெற்றதோடு இந்திய மொழிகள் அனைத்திலும், உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அண்மையில் திரைப்படமாக்கப்பட்ட இப்புதினக் கதை குடியரசுத் தலைவரின் தங்கப் பதக்கப் பரிசையும் பெற்று வெற்றிக்கொடி நாட்டியது அனைவரும் அறிந்ததே. இவரது மற்றொரு சிறந்த படைப்பான 'ஏணிப்படிகள்' என்ற புதினத்திற்கு 1964ஆம் ஆண்டிற்கான கேரள சாகித்திய அக்காதெமியின் பரிசு கிடைத்துள்ளது.

கருத்தாழம், இயற்கையான நடை, தெளிவு போன்ற சிறப்புக்கள் பலவும் ஒரு சேரக் கொண்டு திகழும் இவரது கதைப் படைப்புக்கள் மக்களிடையே பெருஞ் செல்வாக்கையும் புகழையும் பெற்றுள்ளன.

கவர்ச்சிமிக்க எளிய நடையின் மூலம் எத்தகைய கருத்துக்களையும் நேரடியாகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் மனத்தில் பதியும் வண்ணம் லாவகமாகக் கூறுதல் இவரது நடைக்குள்ள தனிச் சிறப்பாகும்.

வழக்குரைஞராகப் பணியாற்றிய காலத்தில் இவரது வாழ்வில் ஏற்பட்ட சுவையான சம்பவங்களை 'என்டே வக்கீல் ஜீவிதம்' (என்னுடைய வழக்குரைஞர் வாழ்க்கை) என்ற தனது வாழ்க்கை வரலாற்று நூலின் மூலமாகச் சுவைபட எடுத்துக் கூறுகிறார் தகழி.

அமெரிக்கா, ரஷியா, இங்கிலாந்து, மலேசியா, ஜப்பான், தாய்லாந்து போன்ற பல்வேறு நாடுகளில் சுற்றுப்பயணம் சென்று திரும்பிய தகழி தமது பயண அனுபவங்களைக் கூறும் பயண நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

கவர்ச்சியற்ற தோற்றமுடைய இவர் எளிமையின் உருவமாக வாழ்ந்து வருகிறார். ஓயாது படிக்கும் பழக்கமுடைய இவர் தனது படைப்புக்களை எழுதத் தொடங்கிவிட்டால் ஒரு சில நாட்களுக்குள்ளாகவே தொடர்ந்து எழுதி முடித்து விடுகிறார். எழுதுவதற்கு அமைதியான சூழ்நிலையை விரும்பும் இவர் எப்போதும் அதிகாலை நேரங்களையே எழுதத் தகுந்த நேரமாகக் கொண்டுள்ளார்.

சொல்லேருழவரான தகழி தமது வேளாளர் குல மரபுக்கேற்ப வேளாண்மைத் தொழிலில் மிக அதிகமான ஆர்வமும் அக்கறையுமுடையவராக இருக்கிறார். படிக்கும் நேரமும் எழுதும் நேரமும் போக மீதமுள்ள காலத்தின் பகுதியை வேளாண்மைத் தொழிலுக்கெனவே ஒதுக்கிக்கொண்டு ஒரு உண்மை உழவராக வாழ்ந்து வருகிறார் தகழி.

மாஸ்கோவில் வெளியாகும் பல சோவியத் செய்தித் தாள்களின் தினசரி பிரதிகளின் எண்ணிக்கை 10 இலட்சம் மிஞ்சிவிட்டது. 1969 ஆம் ஆண்டில் "பிராவ்தா" பிரதிகளின் எண்ணிக்கை புரட்சிக்கு முந்திய ரஷ்யாவில் வெளியான எல்லா செய்தித் தாள்களின் தினசரி வெளியீடுகளின் எண்ணிக்கையைப் போல இரண்டு மடங்காகும். "இஸ்வெஸ்தியா" வின் தினசரி வெளியீடு 80 இலட்சம பிரதிகளை எட்டியது.

— சோவியத்செய்தி

READ

SOVIET LAND!

A MAGAZINE OF SOVIET-INDIAN FRIENDSHIP

SUBSCRIPTION RATES:

	One Year	Three Years
English	Rs. 7-00	Rs. 14-00
Tamil, Telugu, Malayalam, Kannada and other Indian languages	Rs. 6-00	Rs. 12-00

Further concession Rs. 2/- for Renewals.

Beautiful multi-coloured Calendar
for all subscribers

Attractive Pocket Diary for 3 year
subscribers along with the Calendar

Subscribe through our authorised local agents
or send the amount directly to:

SOVIET LAND OFFICE,

44, THEAGARAYA ROAD, MADRAS-17.

நூலகம் – கிடங்கு

எஸ். கந்தசாமி

'புத்தகங்களை நேசியுங்கள்' என்று ஒரு சமயம் கார்க்கி எழுதினார். 'தன்னிடம் படிந்திருக்கும் நல்ல அம்சங்கள் அனைத்திற்கும் புத்தகங்களே காரணம்' என்று கூடவே சொன்னார்.

ஒவ்வொரு வீட்டிலும் பூஜை அறை இருப்பது மாதிரி—புத்தக அறை ஒன்று ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டுமென்று அண்ணாதுரை சொன்னார்.

இரண்டு உதாரணங்களும் புத்தகங்களின் அருமையை — புத்தகங்கள் வாங்கி வைத்துக் கொண்டு படிப்பதின் அவசியத்தைச் சொல்பவை. ஆனால் இன்றைய பொருளாதார நிலையில் தனி மனிதன் நிறைய புத்தகங்கள் வாங்க முடியாது. இக் குறையை நூலகங்கள் தீர்க்கின்றன. பலவகையான புத்தகங்களை நூலக நிர்வாகிகள் வாங்கி வைத்து, உறுப்பினர்களுக்கு விநியோகிக்கிறார்கள்.

விநியோகம் செய்கிறார்கள் என்று சொன்னேன். அந்த விநியோகம் சரியாக நடக்கிறதா என்பதுதான் கேள்வி. ''இல்லை'' என்பது பெரும்பாலானவர்களின் அபிப்ராயம்.

'படிப்பதற்குப் புத்தகங்கள்' என்பது நூலகங்களின் கொள்கை. ஆனால் நடைமுறையோ சேமிப்பதற்குப் புத்தகங்கள். பரிவர்த்தனக் களமாக இருக்கவேண்டிய நூலகங்கள் சேமிப்புக் கிடங்குகளாக இருக்கின்றன.

இப்படிப்பட்ட சேமிப்புக் கிடங்குகள் இரண்டு சென்னையில்

உள்ளன. ஒன்று மியூசியத்தை ஒட்டியுள்ள கன்னிமாரா நூலகம். இரண்டாவது மவுண்ட் ரோடில் உள்ள சென்னை மத்திய நூலகம். தமிழ் நாட்டிலேயே இவைதான் பெரிய புத்தகக் கிடங்குகள் என்று நினைக்கிறேன். இங்கு ஏராளமான, தரமான புத்தகங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

'Reference Books' என்று சில புத்தகங்களை வைத்திருப்பார்கள். ஆனால் கன்னிமாராவில் 1930க்கு முன்னால் பிரசுரமான புத்தகங்களெல்லாம் Reference தான். ஓவிய புத்தகத்தை உங்களுக்குத் தரவேமாட்டார்கள். ஓவியக் கல்லூரி முதல்வர் உங்களுக்கு புத்தகம் தரலாம் என்று தனியாக நன்னடத்தைக் குறிப்பு எழுதித் தரவேண்டும். 20 ரூபாய் கட்டி, கெஸட்டட் ஆபீஸர் கையெழுத்து வாங்கி உறுப்பினராகியிருந்தாலும் உங்களுக்குப் புத்தகம் தரமாட்டார்கள். மகா மேதாவியான ஒரு நூலகர், "நீங்கள் ஏன் ஓவியம் சம்பந்தமான புத்தகம் படிக்கவேண்டும்?" எனறு கேட்டார். ரொம்ப நியாயமான கேள்வி. நான் என்ன படிக்கவேண்டும், என்ன படிக்கக் கூடாது என்பதை அவர்தான் தீர்மானிக்க வேண்டும்.

இந்த முறைகளெல்லாம் பிற நாட்டினா நடத்தும் எந்த நூலகத்திலும் இல்லை. கெஸட்டட் ஆபீஸர் கையெழுத்து வாங்கிக் கொண்டுபோய் உறுப்பினராக வேண்டாம். பணம் கட்டினால் போதும் உறுப்பினராகிவிடலாம். அவர்கள் நம்மீது நம்பிக்கை வைக்கிறார்கள். புத்தகங்கள் படிப்பதற்குத்தான்; சேமித்து வைப்பதற்கு அல்ல என்பதை மனப்பூர்வமாக உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் பிறநாட்டு நூலகங்கள் வெறும் கிடங்குகளாக இல்லாமல், உண்மையிலேயே நூலகங்களாக இருக்கின்றன. நல்ல தரமான புத்தகங்கள் வேண்டுமென்றால் பிறநாட்டு நூலகங்களுக்குத்தான் போகவேண்டும் நாம்.

சென்னை மத்திய நூலகத்தில் நல்ல புத்தகங்கள் எல்லாம் சேமிப்புக் கிடங்கில் இடக்கின்றன. போன மாதம் வரையில் சர்குலேஷனில் இருந்த புத்தகம் இந்தமாதம் Referenceல் இருக்கும். காரணம் யாருக்கும் தெரியாது. Reference என்றால் Referenceதான். அப்பீலே கிடையாது! ஒரே புத்தகத்தின் இரண்டு மூன்று பிரதிகளும் Reference இல் கிடக்கும்!

சமீபத்தில் காந்தியின் புத்தகங்களைத் தேடியபோது முக்கியமான புத்தகங்களெல்லாம் Referenceஇல் கிடந்தன. ஒரே புத்தகத்தின் இரண்டு பிரதிகளையும் அங்கே காண முடிந்தது.

ரொம்ப அபூர்வமான—கிடைக்காத புத்தகங்களை Referenceஇல் வைப்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் கிடைக்கக்கூடிய புத்தகங்களை — அரசாங்க வெளியீடுகளை எல்லாம் Referenceஇல் வைப்பது ஏனோ? உதாரணமாக பி. எஸ். பாலிகாவின் மாவட்டப் புத்தகங்கள் — சுமார் பத்துப் பதினைந்து ரூபாய் விலையுள்ள புத்தகங்களை Referenceஇல் வைக்க வேண்டுமா? அப்படி வைப்பது அவசியமென்றால் சர்க்குலேஷனுக்கு இன்னொரு பிரதி வாங்கி வைக்கக் கூடாதா?

சென்னை மத்திய நூலகத்தில் ஒரு ரகசியக் கிடங்கு இருக்கிறது. அந்த ரகசியக் கிடங்கு இருப்பதே ரொம்பப் பேருக்குத் தெரியாது. அது மாடியில் தனியாக இருக்கிறது. அந்தக் கிடங்கில் நல்ல புத்தகங்கள் இருக்கின்றன. அவைகளை பூட்டுக்குமேல் பூட்டாகப் பூட்டி வைத்திருக்கிறார்கள். அந்த ரகசியக் கிடங்கை நீங்கள் பார்க்க வேண்டுமென்றால் முதலில் அது இருப்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். அப்புறம் இரண்டு மூன்று பேர்களைப் பார்க்கவேண்டும். கால் மணி நேரம் — அரைமணி நேரம் காத்திருக்கவேண்டும். பிறகு ஒருவர் சாவியுடன் வந்து மேலே அழைத்துக்கொண்டு போவார். உங்களுக்குப் பொறுமை இல்லாவிட்டால் திரும்பி வந்து விடுவீர்கள்.

புத்தகங்கள் இப்படிச் சேமித்து வைக்கத்தானா?

நூலகங்களின் பணி புத்தகங்களைப் பதுக்கி, வாசகர்களின் கண்களில் படாமல் வைத்திருப்பதுதானா?

கிடங்கில் போடவா புத்தகங்கள் வாங்கப்படவேண்டும்?

சாதாரணமான புத்தகங்களில் இரண்டு மூன்று பிரதிகள் வாங்கி, விநியோகத்திற்கு வைக்கும் நூலகம், தரமான புத்தகங்களையெல்லாம் கிடங்கில் போடுவது ஏன்?

★

சம்பளக் கமிஷனுக்கு சிபாரிசு

தமிழ் நாடு நூலகர்கள் சங்கத்தின் பொது நூலகர்கள் பிரிவின் சார்பில், இரண்டாவது சம்பளக் கமிஷனுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆலோசனைகள் சிபாரிசுகள் குறித்து ஆராய 25-12-69ல் சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் ஒரு சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. சென்னை மாவட்ட மத்திய நூலகர் திரு. கோவிந்தராசன், வைணவக் கல்லூரி நூலகர் திரு. பா. பெருமாள், தமிழ் நாடு நூலகர் சங்க பொது உறவு அலுவலர் திரு. இப்ராகிம், பொது நூலகப்பிரிவு செயலாளர் திருமதி சுசிலாகணேசன், கல்லூரிநூலகர் பிரிவுச் செயலாளர் திரு. ராம. சுப்ரமணியம், மதுரை மாவட்ட மத்திய நூலகத்தின் நூலகர் திரு. பெரிய நாயகம், மற்றும் பல மாவட்டங்களிலிருந்து பல பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். சில மாவட்ட நூலக ஊழியர்கள் சங்கங்களிலிருந்து ஆலோசனைகளும் எழுதியனுப்பப்பட்டிருந்தன. நீண்ட நேர ஆலோசனைக்குப் பிறகு பொது நூலகத் துறைக்கு என்று ஒரு சிபாரிசும் கல்வித் துறை நூலகர்களுக்கு என்று ஒரு சிபாரிசும் தயாரித்து சம்பளக் கமிஷனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நூலகர் அறிமுகம்

1. பெயர்: K. நடராசன்

2. சந்திரப்பாடி (மாயூரம் வட்டம்: தஞ்சாவூர் மாவட்டம்)

3. பிறந்தநாள்: 16.6.1940

4. பொதுக்கல்வித்தகுதி: பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சி (கழக உயர் நிலைப் பள்ளி; ஆக்கூர்)

5. நூலகவியற் கல்வித் தகுதி: சென்னை கன்னிமாராபொது நூலகம் வழங்கிய நூலக வியற் தகுதிச் சான்றிதழ்

6. அனுபவம்; தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழு கிளை நூலகங்களில் 9 ஆண்டுகளாகத் துணை நூலகர்

7. தற்போது பணி புரியும் இடம்: மாவட்டக் கிளை நூலகம்; பொறையார் Po. மாயூரம் வட்டம்.

பெயர்: ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

பிறப்பிடம்: ஆலந்தூர், செங்கை மாவட்டம்

பிறந்ததேதி: 1.6.1942

கல்வி: பள்ளி இறுதி வகுப்பு. நூலக அறிவியலில் சான்றிதழ், கன்னிமாரா நூலகம், மார்ச் 68

அனுபவம்: கடந்த பத்தாண்டுகளாக செங்கை மாவட்டம் நூலக ஆணைக்குழுவின் கீழ் பல நூலகங்களில் பணியாற்றியவர். தற்பொழுது பணியாற்றும் ஊர் பரங்கிமலை.

சிறப்புப் பணிகள்; கவிதைகள், இசைப்பாடல்கள், கவிதை நாடகங்கள் எழுதுவார். பத்திரிகைகளிலும் வானொலியிலும் வெளி வந்துள்ளன. 1. மோகனரங்கன் கவிதைகள் 2. வைர மூக்குத்தி 3. சித்திரப்பந்தல் 4. கனவுப் பூக்கள் ஆகிய கவிதை நூல்கள் இவரால் எழுதப் பட்டுள்ளன.

செய்திகள்

கன்னிமாராப் பொது நூலகம்

1969 நவம்பர் மாதத்தில் கன்னிமாராப் பொது நூலகத்தில் 42 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் மொத்த உறுப்பினர் தொகை 7508க்கு உயர்ந்துள்ளது. 11,559 வாசகர்கள் 45,451 நூற்களைப் பயன்படுத்தியுள்ளனர். 10,774 நூற்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று படிக்க அனுமதிக்கப்பட்டன.

தேசீய நூலக வார விழா தஞ்சாவூர்

தஞ்சையில் 30-11-69 பிற்பகல் 2 மணிக்கு "தேசீய நூலக வார விழா" கொண்டாடப்பட்டது. திருவாளர்கள் சுப்ரமணியன், கணேசன், ஜெயசந்திரன், அருணாசலம், சீராளன், அருள், சௌந்தரராஜன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. சென்னைப் பல்கலைக் கழகத்தில் M.L.Sc., பட்டப்படிப்பை வெகு விரைவில் துவக்க வேண்டும்.

2. நூலகத் துறைக்கு தனி இயக்குநரை நியமிப்பதன் மூலம் 1948ல் இயற்றப்பட்ட நூலகச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும்.

3. பல துறைகளைச் சார்ந்த தலைமை நூலகர்களின் உயர்தரக் கமிட்டியொன்றை அமைத்து நூலகப் பணி வளர்ச்சி பற்றியும் சம்பள நிர்ணயம் பற்றியும் முடிவு எடுக்கச் செய்யவேண்டும்.

4. கல்லூரி நூலகர்களுக்கு U.G.C. சிபாரிசுப்படி சம்பளம் வழங்கப்படவேண்டும். கல்லூரி நூலகர்களை, அத்துறையின் தலைவர்களாகக் கருதி, கல்லூரி பல்கலைக் கழகங்களின் நிர்வாகக் குழுக்களில் கலந்து பணியாற்ற மற்ற துறைகளின் தலைவர்களைப் போல உரிமை வழங்கப்பட வேண்டும்.

திருக்காட்டுப்பள்ளி (தஞ்சை)

திருக்காட்டுப் பள்ளி கிளை நூலகத்தில் 14-11-69 முதல் 20-11-69 வரை, நூலகத்திலுள்ள, நூல்கள், பத்திரிகைகள் எல்லாம் காட்சிக்கு வைக்கப்பட்டு "தேசீய நூலக வார விழா" கொண்டாடப்பட்டது.

சூரக்கோட்டை (தஞ்சை)

20-11-69ல் சூரக்கோட்டை கிளை நூலகத்தில் "தேசீய நூலக வார விழா" கொண்டாடப்பட்டது. பலர் சொற்பொழிவாற்றினர். நூலகத்திலுள்ள பல அரிய நூல்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு, துணை நூலகர் திரு. கிருஷ்ணமூர்த்தியால் விளக்கங்கள் தரப்பட்டன.

முத்துப்பேட்டை (தஞ்சை)

முத்துப்பேட்டை கிளை நூலகத்தில் 14-11-69 முதல் 20-11-69 வரை "தேசீய நூலக

வார விழா'' கொண்டாடப் பட்டது. இறுதி நாளான 20-11-69ல் திரு. அ. ஜெய ராமன் தலைமையில் கருத்தரங் கும் நடைபெற்றது. அதில் பல அறிஞர்கள் பங்கேற்றனர். துணை நூலகர் திரு. கோவிந்தராசன் நன்றி நவின்றார்.

ஆரணி (வட ஆற்காடு)

ஆரணி கிளை நூலகத்தில் 20-11-69ல் ''தேசிய நூலக வார விழா'' நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட நூலக ஆணைக்குழு உறுப்பினர் திரு. எம். கணேசன், M.C. தலைமை வகித்தார். பலர் சொற்பொழி வாற்றினர். இந்த வாரத்தில் 110 புதிய அங்கத்தினர் சேர்க்கப் பட்டனர். விழாவின் முடிவில் துணை நூலகர் திரு. எஸ். டி. ராஜகோபாலன் நன்றி நவின்றார்.

காசிபாளையம் (கோவை)

காசிபாளையம் கிளை நூலகத் தில் 20-11-69ல் ''தேசிய நூலக வார விழா'' நடைபெற்றது. பேரூராட்சி உபதலைவர் K. K. சீனிவாசன் அவர்கள் தலைமை வகித்தார். பலர் சொற்பொழி வாற்றினர்.

குன்னத்தூர் (கோவை)

குன்னத்தூர் கிளை நூலகத்தில் 18-11-69ல் ''தேசிய நூலக வார விழா'' டாக்டர் எஸ். கணபதி தலைமையில் கொண்டா டப்பட்டது. பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். விழா முடிவில் நூலக உதவியாளர் K. சின்னசாமி நன்றி கூறினார்.

திருமுருகன் பூண்டி (கோவை)

20-11-69ல் திருமுருகன்பூண்டி கிளை நூலகத்தில் சிற்பி. எஸ். கனகரத்தினம் அவர்கள் தலைமை யில் ''நூலக வார விழா'' சிறப் புடன் கொண்டாடப்பட்டது. பலர் சொற்பொழிவு நிகழ்த்திய பின் கிளை நூலகர் திரு. ம. அபீத்தா ரஹிமான் நன்றி கூறினார்.

தொட்டம்பாளையம் (கோவை)

20-11-69ல் தொட்டம்பாளை யம் கிளை நூலகத்தில் ''தேசிய நூலக வார விழா'' கொண்டா டப்பட்டது. பலர் சொற்பொழி வாற்றினர். நூலக உதவியாளர் திரு. வி. ஆர். பழனிசாமி நூல கக் குழுவின் சார்பில் நன்றி நவின்றார்.

சிவன்மலை (கோவை)

சிவன்மலை கிளை நூலகத்தில் 14-11-69 முதல் 20-11-69 வரை ''தேசிய நூலக வார விழா'' கொண்டாடப்பட்டது. புத்தகக் கண்காட்சியும் நடை பெற்றது. 20-11-69ல் சொற் பொழிவும் நடைபெற்றது.

சிறுவலூர் (கோவை)

சிறுவலூர் கிளை நூலகத்தில் 14-11-69 முதல் 20-11-69 வரை ''தேசிய நூலக வார விழா'' கொண்டாடப்பட்டது. மகாத்மாகாந்தியின் நூல்களும், பிறநாட்டு அறிஞர்களின் நூல் களும் தனித்தனியாகக் கண் காட்சிக்கு வைக்கப் பட்டன. இந்த ஊர் நடுநிலைப் பள்ளியில் இதற்கான கட்டுரைப் போட்டி யொன்றும் மாணவ, மாணவிய ருக்காக நடைபெற்றது. 20-11-69ல் பல அறிஞர்களால் சொற்பொழிவும் நிகழ்த்தப்பட் டது. கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக் குப் பரிசும் வழங்கப்பட்டது.

விழா முடிவில் துணை நூலகர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி நன்றி நவின்றார்.

சங்கனூர் (கோவை)

சங்கனூர் கிளை நூலகத்தில் 14-11-69 முதல் 20-11-69 வரை "தேசீய நூலக வார விழா" கொண்டாடப்பட்டது. வாசகர்களுக்கு வசதியாகப் புத்தகக் கண்காட்சி நடை பெற்றது. ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் வாசகர் களால் கருத்தரங்குகளும் நடை பெற்றது.

கள்ளிப்பட்டி (கோவை)

கள்ளிப் பட்டி கிளை நூலகத்தில் 14-11-69 முதல் 20-11-69 வரை "தேசீய நூலக வார விழா" நடைபெற்றது. புத்தகக் கண்காட்சியும் சிறப்புச் சொற் பொழிவுகளும் நடைபெற்றன.

தாளியூர் (கோவை)

தாளியூர் கிளை நூலகத்தில் 20-11-69ல் "தேசீய நூலக வார விழா" நடைபெற்றது. பல அறிஞர்கள் சொற்பொழி வாற்றினர். விழா முடிவில் துணை நூலகர் திரு. ச. க. விநாயகம் நன்றிகூறி, இனிப்பும்வழங்கினார்.

கோபி (கோவை)

கோபிச் செட்டிப் பாளையம் 1-ம் நம்பர் கிளை நூலகத்தில் 14-11-69 முதல் 20-11-69 முடிய "தேசீய நூலக வார விழா" நடைபெற்றது. 20-11-69 மாலை சிறப்புச் சொற் பொழிவும் நடைபெற்றது. பல அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

தல்லா குளம் (மதுரை)

தல்லா குளம் கிளை நூலகத்தில் 22-11-69ல் மதுரை நகரத் தந்தை திரு. எஸ். முத்து அவர் கள் தலைமையில் "தேசீய நூலக வார விழா" நடைபெற்றது. நூலக மேலாளர் திரு. T. ராம சாமி அனைவரையும் வரவேற்றார். மாவட்ட கல்விஅலுவலர் செல்வி என். ஜானகி தல்லா குளம் கிளை நூலக வாசகர் வட்டத்தைத் துவக்கி வைத்தார். பல அறிஞர் கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

தல்லா குளம் வாசகர் வட்டத் தின் முதல்கூட்டம் திரு. வெ. மு. இளங்கோ தாசன் தலைமையில் 21-12-69ல் நடைபெற்றது. துணை நூலகர் திரு. செ. சிதம் பரம் அனைவரையும் வரவேற்றார். பல அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

போடி (மதுரை)

போடி நாயக்கனூர் கிளை நூலகத்தில் 16-11-69ல் "தேசீய நூலக வார விழா" கொண் டாடப் பட்டது. நூலகப் பெருமை, வளர்ச்சி, பயன், நூலகர் கடமை, வாசகர் தொடர்பு பற்றிப் பல அறிஞர் கள் சொற்பொழிவாற்றினர். இறுதியில் துணை நூலகர் திரு மா. மணி நன்றி நவின்றார்.

நிலக்கோட்டை (மதுரை)

நிலக்கோட்டை கிளை நூலகத் தில் "தேசீய நூலக வார விழா" 18-11-69ல் நடைபெற்றது. புத்தகக் கண்காட்சியும், சொற் பொழிவும் நடைபெற்றது.

உத்தமபாளையம் (மதுரை)

உத்தம பாளையம் கிளை நூலகத் தில் 20-11-69ல் "தேசீய நூலக வார விழா" சிறப்புடன் கொண் டாடப் பட்டது. காந்தியின் உருவப்படத்தை கௌரவ மாஜி ஸ்ட்ரேட் திரு. G. சண்முகம் திறந்து வைத்தார். பல அறிஞர் கள் சொற்பொழிவாற்றினர்.

புத்தக விமரிசனம்

பூனைக் கண்

'பூனைக்கண்' என்ற தலைப்பைக் கண்டதும் இம்மாதிரித் தலைப்பில் என்ன கதை அவ்வளவு சுவாரஸ்யமாக எழுதி விடப் போகிறார்கள் என்ற அலட்சியத்துடனும், 'பூனைக்கண்' என்ற வார்த்தையிலே ஏற்பட்ட அருவெறுப்புடனும் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினேன். என்ன ஆச்சரியம்! கதையிலே வரும் உணர்ச்சிச் சித்திரமான குஸுமா 'பூனைக் கண்'ணைப் பார்த்து அருவெறுப்படைகிறாள். அவள் பைத்தியமாவதற்கு அதுவே காரணமாகி விடுகிறது. கதையின் போக்கு காந்தம் போல் நம்மை இழுத்துச் செல்கிறது. கதையை மேலும் மேலும் படித்துக் கொண்டே போகும்போது நாமும் அந்தப் பாத்திரங்களுடன் ஐக்கியமாகி அவர்களுடைய உணர்ச்சிகளுடன் சிக்கி, அவர்கள் அழும் போது நம்மையும் கண்ணீர் சிந்த வைத்துவிடுகிறது. அவ்வளவு சிறந்த உணர்ச்சிகரமான தத்துவ நாவல் இது.

இது 'மொழிபெயர்ப்பு' என்று முகப்பிலே அச்சடிக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியம் ஏற்படுகிறது. மொழிபெயர்ப்பாகவே தெரியவில்லை. காரணம் நாவலின் சரளமான நடையும், கதையின் போக்கும் அவ்வளவு இனிமையாக இருக்கிறது, மொழிபெயர்ப்பு மிகவும் பிரமாதம். ஒவ்வொரு குடும்பத்திலும் கல்லூரி, பொது நூலகங்களிலும் அவசியம் இருக்க வேண்டிய நல்ல நாவல் இது.

கன்னடமூலம்: ஸ்ரீமதி திரிவேணி, தமிழாக்கம்: எஸ். கே. சீதாதேவி, வெளியீடு: வாசகர் வட்டம், சென்னை-17. அக்டோபர், 1969. பக்கங்கள்: 384. விலை ரூ. 8

போர்க்கோலம்

உயர்ந்தவன் — தாழ்ந்தவன், உள்ளவன்— இல்லாதவன் என்ற பாகுபாடு தொன்றுதொட்டு இருந்துவந்ததல்ல. மனித வளர்ச்சியில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் இடையில் ஏற்பட்ட நிலைதான் இது. இல்லாதவனும், தாழ்ந்தவனும் தன்னிலை உணர்ந்து உரிமையைத் தட்டிக் கேட்க இந்த நூற்றாண்டில்தான் விழிப்புணர்ச்சி பெற்றான்.

இந்தப் போராட்டம் எல்லா நாடுகளிலும் நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது. இலங்கையிலும் நடைபெறுகிறது. கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் உடைமை வர்க்கம் தன் நலனைக் கட்டிக்காப்பதிலும், அதற்காக அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதிலும் முன் நிற்பதால் உரிமை கேட்டுப் போராடும் உழைப்பாளி வர்க்கம் தங்களுக்குச் சாதகமான சட்டங்கள் இல்லாததாலும், வறுமையும், வேலை இல்லாத் திண்டாட்டமும் பெருகிவருவதாலும், சமுதாயத்தை மாற்றியமைக்க போர் தொடுத்து வருகின்றனர். அவர்

களின் போர்க் குணத்தைஅடக்கி ஒடுக்க அரசாங்கப் போலீசும், ராணுவமும் ஆயுதமேந்தும் போது, தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தங்களுக்கு எதிரான சட்டங்களை உடைத்தெறியவும், தாங்களும் பதிலுக்கு ஆயுதம் ஏந்த வேண்டியதுதான் என்று உழைப்பாளி வர்க்கத்தில் ஒரு சாரார் முடிவு செய்து, போராடி வருகின்றனர். இந் நிகழ்ச்சியை இலங்கையில் யாழ்ப் பாணப்பகுதியை பின்னணியாக வைத்து அருமையான நடையில், எளிய முறையில், சாதாரண கிராமமக்களை பாத்திரங்களாக்கி மனத்தைக் கவரும் வகையில் அற்புதமாகப் படைத்திருக்கிறார் ஆசிரியர். கருத்துக்கள் மாறுபடலாம். ஆனால் நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியை படம்பிடித்துக் காட்டுபவன்தான் உண்மையான இலக்கியகர்த்தா. அந்த இலக்கியமும் சாகாவரம்பெறும். அந்த வகையில் ஒரு நாவலுக்குரிய சகல அமைப்புக்களுடனும் எழுதப்பட்ட ''போர்க்கோலம்'' நெஞ்சை அள்ளும் சிறந்தபடைப்பாக அமைந்துள்ளது பாராட்டத்தக்கது.

ஆசிரியர்: செ. கணேசலிங்கன், விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. பக்கங்கள்: 244. விலை ரூ. 4-75

—க. நாராயணன்

ஆலய தரிசனம்

தொட்டால் துவண்டுவிடும் மென்மை மட்டும்தான் பெண்மைக்கு லட்சணமா?

பெண்மையின் சிறப்பை வலியுறுத்தும் சிறந்த நாவல் இது. இந்த நாவலுக்கு ஒரு நல்ல லட்சியம் இருக்கிறது. நாவலுக்கு ஒரு கருப்பொருள் தேவை. காரண காரிய நீதியாகத்தான் உலகம் இயங்குகிறது. நாவலும் அப்படியே.

பாத்திரங்களை எந்த வகையில் படைக்கவேண்டும் என்பதைஆசிரியனே முடிவு செய்யவேண்டும். இம்முறையில் இந்நாவல் ஆசிரியர் வெற்றியும் அடைந்துள்ளார். இந்நாவல் பாத்திரப்படைப்பில் ஒரு புதிய சோதனை.

......''கிராமம் பூராவும் ஒரு குடும்பம் ஆகும். கிராமம் பூராவுக்கும் நிலம் சொந்தமாகும். எல்லோருக்கும் போதுமான உணவும், உடையும், ஓய்வும் கிடைக்கும்...அந்தக் காலம் வருகிறது, மெதுவாக, சிறிது, சிறிதாக......'' இப்படிப்பட்ட நம் பிக்கையூட்டும் சமதர்ம சோஷலிச கருத்துக்களும் உள்ள நல்ல நாவல் இது.

கல்லூரி, பள்ளி, பொது நூலகங்களில் அவசியம் இடம்பெற வேண்டிய நாவல் இது.

ஆசிரியர் எம். வி. வெங்கட்ராம் பாராட்டுக்குரியவர்.

ஆசிரியர்: எம். வி. வெங்கட்ராம், வெளியீடு: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17 நவம்பர், 1969. பக்கம்: 288 விலை: ரூ. 5-00.

பூ மணம்

இது ஒரு காதல் கதை.

ராஜேந்திரன், பூமா, பூங்குழலி, மல்லிகா இப்படிப்பட்ட பெயர்களினூடே 'பூ' மலர்கிறது, மணம் பரப்புகிறது. அழகும் அமைதியும் பிணைந்த தமிழ்க்

குடும்பம் உருவாகிறது. இனிய நாவல் பிறக்கிறது.

காதலைப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் அனுபவிக்கும் இன்ப துன்ப உணர்ச்சிகள் இரக்கத்துடன் சித்தரிக்கப் பட்டுள்ளன.

நகர வாழ்வில் பங்களா, கார், டெலிபோன், நண்பர்கள், கலையுணர்வு, உல்லாசத் தன்மை இவ்வளவும் உள்ளவர்கள் எப்படியெல்லாம் காதலால் இன்ப வேதனை அடைகிறார்கள் என்பதை இதனால் நாம் அறிகிறோம்.

நல்ல திரைப்படக் காட்சி போல் கதை தங்கு தடங்கலின்றி வேகமாக ஓடுகிறது. எளியநடை. சூழ்நிலைக்கேற்ற உரையாடல், இனிய நிகழ்ச்சிகள், இவையாவும் சேர்ந்து நாவலின் சுவையைப் பெருக்குகின்றன.

உல்லாசமாகப் படிக்கக் கூடிய சிறந்ததொரு குடும்பப் புதினம் இது. ஆசிரியர் திரு. பூவை எஸ். ஆறுமுகம் அவர்கள் பாராட்டுக் குரியவர்கள்.

சிறப்பாக பொது நூலகங்கள் கல்லூரி நூலகங்களுக்கு ஏற்ற நவீனம் இது.

ஆசிரியர்: பூவை. எஸ். ஆறுமுகம், வெளியீடு: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17 அக்டோபர் 1969. பக்கம்: 186 விலை ரூ. 3-50.

ஈசாப் நீதிக் கதைகள்

இத்தொகுப்பில் உள்ள கதைகள் ஒவ்வொன்றிலும் ஓர் ஆழ்ந்த உள்ளம் அடங்கியிருக்கிறது. எல்லாக் கதைகளிலும் அறிவுரை உண்டு. கதைதோறும் உலகியல் நிலவுகிறது. அந்த உலகியலும் வியத்தகு முறையில் அமைந்துள்ளது.

மனிதன் அறம்வாழ் நெஞ்சனாய் மட்டும் இருந்தால் போதாது. அறிவு நிறைந்த மாந்தனாயும் இருக்கவேண்டும். இக் கதைகள் அளிக்கும் அறிவுரைகள் மாந்தர் அறிவை வளப்படுத்தும்.

இவை மூன்று பாகங்களாக இப்போது வெளிவந்துள்ளன. இவையாவும் ஈசாப் சொன்ன கதைகள்.

ஈசாப் கிரேக்க நாட்டவர். கி. மு. 520-56ல் வாழ்ந்தவர். அவர் ஓர் அடிமை. ஊர் கூடித் திரண்டு அவரைக் கொன்றது. கொலைக் குக்காரணம் பல கூறுகிறார்கள். கதை சொல்லி மாந்தரை — மன்னரைக் கேலி செய்தார். அவர் தம் குறைகளைச் சுட்டிக் காட்டினார். அதனால் அடிமையாக முடக்கப் பட்டார். ஆயினும் அறிவாசானாய் இருந்து கதைசொன்னார். அவர் சொன்ன கதைகள் சிலவே. அவைகளை இம்மூன்று பாகங்களிலும் படித்து மகிழலாம்.

இக்கதைகளும் படங்களும் இளம் சிறார்களின் இதயத்தைக் கவரக் கூடியன! படங்கள் சற்று பெரிதாக விளக்கமாக இருந்திருக்கலாம். பள்ளிநூலகங்களில் கண்டிப்பாக இருக்கவேண்டிய நூல்கள் இவை.

கருத்து நுண்மை விழைவோர் அனைவருக்கும் இந்நூல்கள் அரிய தொரு விருந்தாய் அமையும்.

ஆசிரியர் மு. சு. அருள்சாமி அவர்களின் எளிய இனிய தமிழ் நடை நெஞ்சைக் கவர்கிறது. பாராட்டுகிறோம்.

நூல்: ஈசாப் நீதிக் கதைகள் (மூன்றுபாகங்கள்.) ஆசிரியர்: பேராசிரியர் மு. சு. அருள்சாமி வெளியீடு: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. நவம்பர், 1969, விலை: ஒவ்வொரு பாகமும் ரூ. 1-50. பக்கம்: 100, 84, 88

— இந்திரா

ஏழைப்பங்காளன் லெனின்

சோஷலிஸப் புரட்சியின் வெற்றிவீரர் — சோவியத் அரசைத் தோற்றுவித்த செம்மல் — உலகத் தொழிலாளர்களின் உற்ற நண்பர்—புதுயுகத் தலைவர் லெனின். இத்தகைய மாமேரு லெனின் நூற்றுண்டு விழாவை (1870-1970) உலகமே மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறது. இவ்வேளையில் வெளிவந்துள்ள சிறப்பு வெளியீடு இது.

எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்திலுமே நேர்மையைக் கடைப்பிடித்து உலக ஏழைப் பாட்டாளி மக்கள் அனைவருமே இன்புற்று வாழ, அல்லும் பகலும் அயராது மனிதாபிமானத்துடன் பாடுபட்டு உழைத்தவர் லெனின்.

தோழர் லெனின் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்த நெறிமுறைகளை சொல்லிலும், செயலிலும், ஒன்றிணைத்து எவ்வாறு வெற்றி கண்டார் என்பதனை எளிய தமிழில் எடுத்துக்கூறும் ஓர் உன்னத நூல் இது.

தமிழ் மக்களுக்கு ஏற்ற பாணியில் மாவீரன் லெனின் வாழ்க்கையை ஆசிரியர் எளிய, சரளமான சுவைமிக்க தமிழ் நடையில் சித்தரித்திருக்கிருர். இயேசுநாதர், மகாவீரர், நபிகள் நாயகம் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை வெளியிட்டுத் தமிழகத்தில் பிரசித்திபெற்ற திரு. அ. லெ நடராாசன் அவர்களே இந்நூலையும் எழுதியுள்ளார்.

பள்ளி, கல்லூரி, பொது நூலகங்களில் பல பிரதிகள் வாங்கி வைத்து இதுபோன்ற பெரியோர் வாழ்க்கை வரலாற்று நூல்களை அனைவரும் அவசியம் படிக்குமாறு ஊக்குவிக்கவேண்டியது நூலகர்களின் நீங்காத கடமையாகும்.

நூல்: ஏழைப் பங்காளன் லெனின், ஆசிரியர்: அ. லெ. நடராசன், வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 6, நல்லதம்பி செட்டி தெரு, சென்னை—2. ஆகஸ்டு 1969. பக்கம்: 404 விலை: ரூ. 5-00

—நூலகர் பா. பெருமாள்

1. மொழி முத்தம்
2. இந்து இதயம்

எத்தனையோ சோதனைகளைத் தாண்டி நடைபோடுகிற எழுத்தாளர் கவிஞர், கலாசிகாமணி கம்பதாசன் அவர்கள். அவருடைய புதிய கவிதை நூல்களே "இந்து இதயமும்" "மொழி முத்தமும்" ஆகும்.

அற்புதக் கற்பனையும், அழகான கருத்துக்களும் கொண்ட அறிவு தரும் கவிதைகளின் தொகுப்புகளே இவை இரண்டு நூல்களும்.

தமிழர்கள் அனைவரும், பொது, கல்லூரி பள்ளி நூலகங்களும் இந்நூற்களை வாங்கி, கவிஞருக்கு ஆதரவு நல்குவது, தமிழுக்குச் செய்யும் தொண்டு எனலாம்.

நூற்கள்: 1. இந்து இதயம், 2. மொழி முத்தம். ஆசிரியர்: கவிஞர் கம்பதாசன், வெளியீடு: மல்லிகைப் பதிப்பகம், 15, நாநாராவ் நாயுடு தெரு, தி, நகர். சென்னை-17

— மெய்யூரான்

வளைக் கரம்

வளைகளணிந்த மென்கரங்களில் புரட்சிக்கான ஆயுதமேந்தி, விடுதலைப் போருக்குப் புறப்பட்ட லூஸியா, அங்கோலாவில் சிறைத் தண்டனை அனுபவிக்கும் காதலனின் அகிம்சை நெறியின் உயர்வை உணர்ந்த உருக்கமான வரலாற்றையும், ஆயிர மாயிரமாய் இளைஞர்களும் யுவதிகளும் போர்த்துகீசிய காலனியாதிக்கத்திலிருந்து அழகிய கோமந்தக பூமியை வீடுவிக்க ஒருமித்த நோக்குடையவராய், தியாகத் தீயிலே குளித்தெழுந்த வீரமும், சோகமும், அன்பும் நிறைந்த உணர்ச்சிமிக்க வரலாற்றினை அழகுபட விளக்கும் சொல்லோவியம்தான் ''வளைக் கரம்'' என்ற சிறப்புமிக்க நாவலாகும்.

ஆசிரியை ராஜம் கிருஷ்ணன் அவர்களின் உன்னத நீண்ட புதியநாவல் இது.

திருமதி கிருஷ்ணன் அவர்கள் இந் நவீனத்தின் வாயிலாக, தேசிய ஒருமைப் பாட்டிற்கு ஒரு ஒரு சிறந்த பணி புரிந்திருக்கிறார்.

'மித்திரன்' — 'சுதேசமித்திரன்' வார இதழில் ஓராண்டு காலம் இந்நாவல் தொடர் கதையாக வந்த போதே, பல வாசகர்கள் வரவேற்றுப் பாராட்டியுள்ளார்கள்.

தலைநகரின் பெரும்பாலான செய்தித் தாள்கள் 41 நகரங்களில் அச்சிடப்படுகின்றன. மாஸ்கோவில் அச்சாகும் செய்திகளின் அச்சுத் தகடுகள் விமானம் மூலம் இந்நகரங்களுக்குக் கொண்டு செல்லப் படுகின்றன. இதனால் மாஸ்கோவில் பிரசுரமாகும் செய்தித் தாளை சிறுநகரங்களிலுள்ள வாசகர்களும் மாஸ்கோ வாசகர்களைப் போலவே அதே நேரத்தில் படிக்க ஏதுவாகிறது.

—சோவியத் செய்தி

தமிழ் வாசகர்கள் இந்த வரலாற்று நவீனத்தை பெருமளவில் வாங்கி ஆசிரியை மேலும் இது போன்ற உன்னத நாவல்களை எழுத உற்சாகப் படுத்துவது அவசியம்.

எல்லா நூலகங்களிலும் அவசியம் இடம் பெறவேண்டிய நல்ல நாவல் இது. இது ஒரு 'தமிழ் உறவு' வெளியீடு. தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம் வெளியிட்டுள்ள மிகப் பெரிய நாவல் இது.

நூல்: வளைக்கரம். ஆசிரியை: ராஜம் கிருஷ்ணன். வெளியீடு: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (X-417) ''தமிழ் உறவு'' 8, சின்னரெட்டித் தெரு, எழும்பூர், சென்னை-8. மே, 1969. பக்கம்: 728 விலை: ரூ 14:00

கல்லுக்குள் ஈரம்

''கல்லுக்குள் ஈரம்'' என்ற இந்நூல் கல்கி வார இதழின் வெள்ளி விழாப் போட்டியில் ரூ. 7500– பரிசு பெற்ற நாவல்.

தமிழ்நாடு இலக்கிய வாசகர் பேரவை 1967–69 ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த இலக்கிய படைப்புகளில் ஒன்ருக தேர்ந் தெடுத்துப்பாராட்டியுள்ளநாவல் இது.

நடந்த நிகழ்ச்சிகளே அடிப் படையாக வைத்து, புதுமையை யும், புரட்சியையும் இணைத்துப் பிணைத்து எழுதப்பட்டுள்ள உணர்ச்சி மிக்க காவியம் இது.

புரட்சி வீரன் ரங்க மணியின் வாழ்க்கையில் நேரும் சம்பவங்கள் மனத்தை குலுங்க வைக்கின்றன. கல்லுக்குள்ஈரம் உண்டு. மனிதன் எவ்வளவுதான் முரட்டுச் சுபாவம் உள்ளவன் ஆனுலும், அவன் உள்ளத்தில் கடைசி காலத்தில் அன்பின் ஈரம்தான் படிந்திருக் கிறது என்பதை அழகுபட எடுத் துரைக்கிருர் ஆசிரியர் ர. சு. நல்ல பெருமாள் அவர்கள்.

அன்பின் உருவம், அடக்கத்தின் இருப்பிடம், பெண்மையின் மென்மை,சுதந்திர வேட்கையின் தாபம், அகிம்சையின் மறுபிறப்பு இப்படி திரிவேணி நமக்குப் புது மைப் பெண்ணுலகக் காட்சி யளித்து நம் மனத்தில் நீங்காத இடம்பெறுகிருர். அவள் உள்ளத் திலும் தெய்வீகமான காதல்!

கடமை யுணர்வோடும் நட் புணர்வோடும் போராடி கடைசி யில் நாட்டுப்பற்றின் வேட்கை யால் பதவியை உதறி யெறியும் சிவானந்தம்!

இப்படி ஒவ்வொரு பாத்திரத் தையும் நம்முன் நடமாட விட்டு, நம்மையெல்லாம் சுதந்திரப் போராட்ட காலத்திற்கு அழைத் துச் செல்கிருர் ஆசிரியர்.

இன்றைய இளம் தலைமுறை யினருக்கு இது போன்ற நாவல் கள் அவசியம் தேவை.

நூல் : கல்லுக்குள் ஈரம். ஆசிரி யர்: ர. சு. நல்லபெருமாள்.வெளி யீடு : வானதி பதிப்பகம் தி. நகர் சென்னை-17. ஆகஸ்டு, 1969, பக்கம் : 630, விலை : ரூ. 12-00.

— இந்திரா

---

129 ஆண்டுகளாக

புகழ்மிக்க சேவை செய்துவருவோர்

வி. பெருமாள் செட்டி & சன்ஸ்

பிரபல ஸ்டேஷனரி & காகித வியாபாரிகள்

8, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, சென்னை-1

&

L. I. C. பில்டிங்ஸ், சென்னை-2.

புதிய புத்தகங்கள்

706 சாயா வனம் 031, 3NKAN, S K9

ஆசிரியர் : சா. கந்தசாமி. வெளியீடு : வாசகர் வட்டம் (Book Venture) 14. தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17 டிசம்பர் 1969. பக்கம் : 240, விலை : ரூ 5-25. வகை: நாவல்.

707 கல்லுக்குள் ஈரம் 031, 3NNAL, K K9

ஆசிரியர் : ர. சு. நல்ல பெருமாள். வெளியீடு : வானதி பதிப்பகம். தி. நகர், சென்னை-17. ஆகஸ்டு, 1969, பக்கம் : 630, விலை : ரூ. 12-00. வகை : நாவல்.

708 ஆலய தரிசனம் 031,3 , A K9

ஆசிரியர் : எம். வி. வெங்கட்ராம். வெளியீடு : வானதி பதிப்பகம், தி. நகர். சென்னை-17. நவம்பர் 1969. பக்கம் : 288, விலை : ரூ 5-00. வகை : நாவல்.

709 பூ மணம் 031, 3 , P K9

ஆசிரியர் : பூவை எஸ். ஆறுமுகம். வெளியீடு : வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. அக்டோபர், 1969. பக்கம்: 186, விலை : ரூ 3-50. வகை : நாவல்.

710 ரோஜாப் பெண் 031, 3x K9

தமிழில் : தி. ஜ. ர. வெளியீடு : வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17, அக்டோபர் 1969. பக்கம் : 76, விலை : ரூ 1-25 வகை : குழந்தை இலக்கியம் – கதைகள்.

711 வீரர் பகத் சிங் V44 g7 —K9

ஆசிரியர் : வி. குருமூர்த்தி, வெளியீடு : வானதி பதிப்பகம் தி. நகர், சென்னை-17. டிசம்பர், 1969. பக்கம் : 148. விலை: ரூ 2. வகை : வாழ்க்கை வரலாறு.

712 டாக்டர் ஜாகிர் ஹுஸேன் V44,1 y7 —K9

ஆசிரியர் : தி. வேங்கட கிருஷ்ணயங்கார், வெளியீடு : வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. டிசம்பர் 1969. பக்கம் : 96, விலை : ரூ 1-50, வகை : வாழ்க்கை வரலாறு.

713 மாவீரன் நெப்போலியன் V y7 —K9

ஆசிரியர் : பூவை அமுதன், வெளியீடு : வானதி பதிப்பகம் தி. நகர். சென்னை-17. நவம்பர், 1969. பக்கம் : 96. விலை : ரூ 1-50. வகை : வாழ்க்கை வரலாறு.

714 சித்திரப் பந்தல் 031,IN C K9

ஆசிரியர் : ஆலந்தூர் கோ. மோகனரங்கன், வெளியீடு : வசந்தா பதிப்பகம், 605, முத்துக் குமாரசாமிசாலை, ஆலந்தூர். சென்னை–16. நவம்பர், 1969. பக்கம் : 96. விலை : ரூ 2-00 வகை ; கவிதைகள் :

715 குளிர் காவிரி 031,INMAT, K K9

ஆசிரியர் : பொன்னகர் மதிவாணன். வெளியீடு: புதுஇலக்கியப் பதிப்பகம். 61, தம்பு செட்டித் தெரு, சென்னை-1. நவம்பர், 1969. பக்கம் : 80. விலை : ரூ. 2-00. வகை : கவிதைகள்.

716 புது மலர் 031,INTH , P K9

ஆசிரியர் : புலவர் திருவாசன். வெளியீடு : புது இலக்கியப் பதிப்பகம். 61, தம்பு செட்டித்தெரு, சென்னை-1. அக்டோபர், 1969. பக்கம் : 72. விலை : ரூ. 1-50. வகை : கவிதைகள்.

717 கலீலியோ Aw —K9

ஆசிரியர் : டி. என். ராமச்சந்திரன். வெளியீடு :புது இலக்கியப் பதிப்பகம். 61, தம்பு செட்டித் தெரு. சென்னை–1. நவம்பர், 1969. பக்கம் : 52. விலை : ரூ. 1-25. வகை : வாழ்க்கை வரலாறு-விஞ்ஞானம்.

718 தென்னகப் பேரரசி V44 —K9

ஆசிரியர் : டி. என். ராமச்சந்திரன். வெளியீடு : புது இலக்கியப் பதிப்பகம், 61, தம்பு செட்டித் தெரு, சென்னை-1. நவம்பர், 1969. பக்கம் : 116. விலை : ரூ. 2-25. வகை : வரலாற்று ஓவியம்.

719 கதை விருந்து 031, 3x K9

ஆசிரியர் : டி. என். ராமச்சந்திரன், வெளியீடு : புது இலக்கியப் பதிப்பகம், 61, தம்பு செட்டித் தெரு, சென்னை-1. பிப்ரவரி, 1969, பக்கம் : 84, விலை : ரூ 1-50 வகை : கதை.

720 நன்றியுள்ள நண்பன் 031, 3x K9

ஆசிரியர் : 'வலம்புரியான்', வெளியீடு : சேது பதிப்பகம், வட பழனி, சென்னை-26. 1969. பக்கம் : 72. விலை: ரூ. 1-50 வகை : குழந்தை இலக்கியம். நீதிக் கதைகள்.

721 தனிப் பறவை 031,3 ,T K9

ஆசிரியர் : 'இரு கூரான்', வெளியீடு : சேது பதிப்பகம், வட பழனி, சென்னை-26. 1969. பக்கம் : 212 விலை : ரூ4-00 வகை : நாவல்.

722 பச்சை மரம் 031,3 , P K9

ஆசிரியர் : சேது சுந்தரம், வெளியீடு : சேது பதிப்பகம். வட பழனி, சென்னை-26. பக்கம் : 160. விலை: ரூ. 3-00 வகை : நாவல்.

723 அவள் ஒரு குழந்தை 031,3 ,A K9

ஆசிரியர் : சேது சுந்தரம். வெளியீடு : சேது—பதிப்பகம். வட பழனி. சென்னை-26. 1969. பக்கம்; 174. விலை: ரூ 3-50 வகை : நாவல்.

724 மலிவான மருந்துகள் L —K9

ஆசிரியர் : "குடுவா" வெளியீடு ; சேது பதிப்பகம், வட பழனி, சென்னை-26. 1961. பக்கம் ; 68. விலை : ரூ 1-50 வகை : மருத்துவம்.

Edited by : KUYILAN (G. Ramalingam)
and Printed by Kondah. Kasi. Seetharamon at Sree Agastya Printers
85, III Main Road, C.I. T.Nagar (Ext.) Madras-35
For the Publishers " Bibliopole "
14, Thanikachalam chetty Road, Madras-17.